
இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

தின பூமி
thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com





**உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர காலக்கெடு நிர்ணயிப்பது கடினம்: சொல்கிறார் ரஷ்ய அதிபர் புடின்**

...2-ம் பக்கம்

**வயநாடு இடைத்தேர்தல்: 23-ம் தேதி மனு தாக்கல் செய்கிறார் பிரியங்கா**

...3-ம் பக்கம்

**சர்பராஸ் - ரிஷப் அபார ஆட்டம்: நியூசிலாந்து அணிக்கு 107 ரன்கள் இலக்காக நிர்ணயித்தது இந்தியா**

...7-ம் பக்கம்






● சென்னை கிண்டியில் நேற்று நடைபெற்ற 2024-ம் ஆண்டிற்கான தென் மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் ஒருங்கிணைப்பு மாநாட்டை, முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் உள்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் தீரஜ்குமார், காவல்துறை தலைமை இயக்குநர்கள் சங்கர்ஜிவால் (தமிழ்நாடு), அலோக் மோகன் (கர்நாடகா), சேக் தர்வேஷ் சாகேப் (கேரளா), ஷாலினிசிங் (புதுச்சேரி), துவாரகா திருமலராவ் (ஆந்திரா) மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழகத்திற்குள் போதைப்பொருட்கள் வருவதை தடுக்க

# அண்டை மாநிலங்களின் ஒத்துழைப்பு அவசியம்

### தென் மாநில காவல்துறை மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, அக். 20-

தமிழகத்திற்குள் போதைப்பொருட்கள் வருவதை தடுக்க அண்டை மாநிலங்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று தென் மாநில காவல்துறை ஒருங்கிணைப்பு மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**இயக்குனர்கள்...**

தென் மாநில காவல் துறை இயக்குனர்கள், படைத்தலைவர்கள் பங்கேற்ற தென் மாநில காவல்துறை ஒருங்கிணைப்பு மாநாடு சென்னை கிண்டியில் நேற்று நடைபெற்றது. இதில், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, அந்தமான் ஆகிய மாநில காவல்துறை இயக்குனர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த நிகழ்ச்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

**ஒருங்கிணைந்து...**

நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது, சட்டம் - ஒழுங்கு, பாதுகாப்பு, நீர் மேலாண்மை போன்ற பல்வேறு விவகாரங்களில் தென் மாநிலங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறோம். போதைப் பொருட்கள், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள், மாநிலங்களுக்கு இடையேயான குற்ற செயல்கள், இணைய வழி குற்றங்கள் போன்ற தீவிர குற்றங்களில் இருந்து மக்களின் பாதுகாபபை உறுதி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை அடைய நாம் இங்கு கூடியுள்ளோம். இத்தகைய குற்றங்களை எதிர்கொள்வதில் தமிழக காவல்துறை பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளது.

**சொத்துகள் பறிமுதல்...**

தமிழ்நாட்டில் போதைப் பொருள் விற்பனை மற்றும் விநியோகத்தை தடுக்க காவல்துறை கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. தமிழக காவல் துறையின் தொடர் முயற்சிகளின் பலனாக மாநிலத்தில் கஞ்சா பயிரிடுவது தடுக்கப்பட்டுள்ளது. கஞ்சா போதைப்பொருள் விற்பனை செய்தவர்களுக்கு சிறை தண்டனை மட்டுமின்றி, அவர்கள் சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருளை ஒழிக்க மாநிலங்களுக்கு இடையே ஒன்றிணைந்த முயற்சி தேவை. தமிழகத்திற்குள் போதைப்பொருட்கள் வருவதை தடுக்க அண்டை மாநிலங்களின் ஒத்துழைப்பு அவசியம். உயர் அதிகாரிகளுடன் நடத்தப்படும் தொடர் ஆய்வு கூட்டங்கள் மூலம் தமிழ்நாட்டை போதைப் பொருட்கள் இல்லாத மாநிலமாக உருவாக்க சரியான பாதையில் செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**பரவும் வதந்திகளால்...**

இன்றைக்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு, சமூக வலைதளங்களில் பரப்பப்படக் கூடிய வதந்திகள் பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அவற்றின் மூலம் பொது அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் செயல்களை நாம் பார்க்க முடியும். ஏன், தமிழகத்தில் கூட அப்படி ஒரு முயற்சியை மேற்கொண்டு பொது அமைதியை சீர்குலைக்க முயன்றதை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பல மாநிலங்களில் இருந்து வதந்தி பரப்பக் கூடியவர்களைத் தேடி கண்டுபிடித்து, அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்தது.

**கண்காணிப்புடன்...**

சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியே, தமிழ்நாடு அமைதியான மாநிலம். அங்கு அமைதியின்மையை உருவாக்க ஏதாவது வதந்தியைப் பரப்புவீர்களா என்று யூடியூபர் ஒருவரது வழக்கில், சமூக வலைதளங்களின் பாதிப்பு பற்றி கடுமையாக சாடியிருந்ததை, இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(கடைசி பக்கம் பார்க்க)

# தீபாவளிக்கு அடுத்த நாளும் விடுமுறை அறிவித்தது அரசு

சென்னை, அக். 20-

தீபாவளியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு நவ.1-ம் தேதி விடுமுறை அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது.,

இவ்வாண்டு தீபாவளியை வரும் 31-ம் தேதி கொண்டாடும் பொருட்டு, தமது சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு நவம்பர் 1-ம் தேதி அன்று ஒரு நாள் மட்டும், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும், அவ்விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் நவம்பர் 9-ம் தேதி அன்று பணி நாளாக அறிவிக்கபடுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 31-ம் தேதி வியாழக்கிழமை அன்று தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அடுத்த நாள் நவம்பர் 1-ம் தேதி (வெள்ளிக்கிழமை) அரசு விடுமுறை அறிவித்துள்ளது.

இதனால் சனி, ஞாயிறையும் சேர்த்து பண்டிகையை சொந்த ஊரில் கொண்டாட மக்கள் திட்டமிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சேலம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட 6 மாவட்டங்களில்

# இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, அக். 20-

தமிழகத்தில் இன்று சேலம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது, வடதமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதனால் இன்று 20-ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

நாளை 21-ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கோயம்புத்தூர் திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட மலைப்பகுதிகள்; நீலகிரி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

வரும் 22-ம் தேதி மற்றும் 23-ம் தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வரும் 24-ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில், காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வரும் 25-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33-34 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25-26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# மீண்டும் புதிய உச்சத்தில் ஒரு பவுன் தங்கம் விலை

### கடந்த 4 நாட்களில் மட்டும் ரூ.1,480 உயர்வு

சென்னை, அக். 20-

மீண்டும் புதிய உச்சத்தில் ஒரு பவுன் தங்கம் விலை உயர்ந்துள்ளது. கடந்த 4 நாட்களில் மட்டும் சவரனுக்கு ரூ.1,480 உயர்ந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் வரை தொடர்ந்து அதிகரித்து கொண்டே வந்த தங்கம் விலை, அதே மாதம் 22-ந்தேதி தங்கத்தின் மீதான இறக்குமதி வரியை மத்திய அரசு குறைத்ததன் எதிரொலியாக அதன் விலை அன்றைய தினம் அதிரடியாக குறைந்தது. அதன் தொடர்ச்சியாக விலை குறைந்து கொண்டே வந்து ஒரு சவரன் ரூ.51 ஆயிரத்துக்கு கீழ் சென்றது. இதனால், நகை பிரியர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் இந்த ஆறுதல் சில நாட்கள் மட்டுமே நீடித்தது.

கடந்த மாதம் இறுதியில் இருந்து மீண்டும் தங்கம் விலை உயர ஆரம்பித்து இருக்கிறது. அதிலும் கடந்த சில நாட்களாக தாறுமாறாக தங்கம் விலை உயர்ந்து வருகிறது. இந்த நிலையில், நேற்று தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டியுது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.320 உயர்ந்து ரூ.58,240-க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.40 உயர்ந்து ரூ.7,280-க்கு விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ரூ.107-க்கு விற்பனையானது. தங்கம் விலை கடந்த 4 நாட்களில் மட்டும் சவரனுக்கு ரூ.1,480 உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஒரே நாளில் 20-க்கும் மேற்பட்ட

# இந்திய விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

புதுடெல்லி, அக். 20-

நேற்று காலை முதல் பல்வேறு இந்திய விமான நிறுவனங்களின் 20-க்கும் மேற்பட்ட விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி ஏர் இந்தியா, இண்டிகோ, ஆகாசா ஏர், விஸ்தாரா, ஸ்பைஸ் ஜெட், ஸ்டார் ஏர் மற்றும் அலையன்ஸ் ஏர் விமானங்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெல்லியில் இருந்து மும்பை வழியாக இஸ்தான்புல் செல்லும் இண்டிகோ விமானத்துக்கும், ஜோத்பூரிலிருந்து டெல்லிக்குச் செல்லும் மற்றொரு இண்டிகோ விமானத்துக்கும், உதய்பூரில் இருந்து மும்பைக்குச் செல்லும் விஸ்தாரா விமானத்துக்கும் மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக இண்டிகோ விமான நிறுவனம் தனித்தனியாக இரண்டு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. அதில், புது டெல்லியில் இருந்து மும்பை வழியாக இஸ்தான்புல் செல்ல இருந்த விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலையை அறிந்திருக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நெருக்கமாக செயல்பட்டு அவர்களின் வழிகாட்டுதல்களின் படி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எங்கள் நிறுவனம் எடுத்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு அறிக்கையில், ஜோத்பூரிலிருந்து டெல்லிக்கு இயக்கப்படும் விமானம் 6E 184, பாதுகாப்பு தொடர்பான எச்சரிக்கையைப் பெற்றுள்ளது. விமானம் டெல்லியில் தரையிறங்கியது. பயணிகள் விமானத்தில் இருந்து இறங்கி விடப்பட்டனர். பாதுகாப்பு நிறுவனங்களின் நடைமுறைகளோடு நாங்கள் ஒருங்கிணைத்து செயல்பட்டு வருகிறோம் என்று தெரிவித்துள்ளது.

விஸ்தாரா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உதய்பூரிலிருந்து மும்பை செல்லும் யுகே 624 விமானம் தரையிறங்குவதற்கு சற்று முன்பு வெடிகுண்டு மிரட்டலை பெற்றது. மும்பை விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியதும், கட்டாய சோதனைகளுக்காக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக்கு விமானம் கொண்டு செல்லப்பட்டது என தெரிவித்துள்ளது.

நேற்று காலை முதல் 20-க்கும் மேற்பட்ட விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளதாக விமான நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நேற்று முன்தினம் விஸ்தாராவின் மூன்று சர்வதேச விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது. பின்னர் அது புரளி என்பது உறுதியாகியது. எனினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒரு விமானம் பிராங்போர்ட்டுக்கு திருப்பி விடப்பட்டது.

கடந்த சில நாட்களில், இந்திய விமான நிறுவனங்களால் இயக்கப்படும் 40-க்கும் மேற்பட்ட விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. பின்னர் அது புரளி என தெரியவந்தது. இது தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### சுமார் 1.20 லட்சம் கரும்பு விவசாயிகளுக்கு

# சிறப்பு ஊக்கத்தொகையாக 247 கோடி ரூபாய் ஒதுக்கீடு

சென்னை, அக். 20-

கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.247 கோடியை ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் 1.20 லட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.


2023-2024 அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்கு பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூ.247 கோடி வழங்கி தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இது தொடர்பாக செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு, கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரித்து நலிவடைந்த நிலையில் இருந்து மீட்டெடுக்க பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கரும்பு விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு அறிவிக்கும் கரும்பு விலைக்கு மேல் ஊக்கத்தொகை அறிவித்து வருகிறது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2919.75 மற்றும் மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.215 யையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.3134.75/- விவசாயிகள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2023-24 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளின் விபரம் சேகரிக்கப்பட்டு, சர்க்கரைத்துறை இயக்குநரகத்தால் கூர்ந்தாய்வு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களின் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி, தகுதியுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.247.00 கோடி மதிப்பில் மாநில அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத் தொகையினால் சுமார் 1.20 லட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| ↓ 218.14 | ↓ 104.20 |
| பாயிண்ட் 81,244.75 | பாயிண்ட் 24,854.05 |



**தங்கம்**
1 சவரன் ₹58,240
1 கிராம் ₹7,280



**வெள்ளி**
1 கிலோ ₹107,000
1 கிராம் ₹107.00

**டாலர்** ₹84.07

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர காலக்கெடு நிர்ணயிப்பது கடினம்

## சொல்கிறார் ரஷ்ய அதிபர் புடின்

**மாஸ்கோ, அக். 20-**

உக்ரைன் உடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான காலக்கெடுவை அமைப்பது கடினமாக இருக்கும் என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு வருகிற 22-ம் தேதி முதல் 24-ம் தேதி வரை நடக்கிறது. இதில் பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கிறார்கள். இந்த நிலையில் ரஷ்ய அதிபர் புடின் தனது அதிகாரப்பூர்வ இல்லமான நோவோ-ஓகாரியோவோவில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-



இந்திய பிரதமர் மோடி எனது நண்பர். அவருடன் சமீபத்திய பேச்சுவார்த்தையின் போது ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து மிகுந்த கவலை தெரிவித்தார். மோடியின் இந்த அக்கறைக்கு ரஷ்யா நன்றியுடன் இருக்கிறது. மோடியை சந்திக்கும் போது இந்திய திரைப்படங்களுக்கும் மேலும் ஊக்கம் அளிப்பது குறித்து விவாதிக்கலாம்.

உக்ரைன் உடனான போரை கொண்டு வருவதற்கான காலக்கெடுவை அமைப்பது கடினமாக இருக்கும். ரஷ்யாவை போரில் அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பு தள்ளியது. ரஷ்ய ராணுவம் உலகின் மிகவும் போர்த்திறன் வாய்ந்த மற்றும் உயர் தொழில்நுட்பப் படைகளில் ஒன்றாக மாறியுள்ளது.

எங்களுக்கு எதிராக இந்தப் போரை நடத்துவதில் நேட்டோ சோர்வடையும். போரில் எங்களது கை ஓங்கி இருக்கிறது. நாங்கள் வெற்றி பெறுவோம். உக்ரைன் ராணுவம், துல்லியமான ஆயுத விநியோக அமைப்புகளை சொந்தமாக கையாள முடியாது. சமாதான பேச்சுவார்த்தையை நாங்கள் விரும்புகிறோம்.

ஆனால் அந்த முயற்சியில் இருந்து உக்ரைன் பின் வாங்கியது. பிரிக்ஸ் ஒருபோதும் யாருக்கும் எதிரானது கிடையாது. இதை பிரதமர் மோடி சரியாக தெரிவித்துள்ளார். பிரிக்ஸ் அமைப்பு மேற்கத்திய நாடுகளுக்கு எதிரானது அல்ல. ரஷ்யா, அமெரிக்கா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. இதற்கு காரணம் அமெரிக்கா தான். இவ்வாறு அவர் கூறினார்.

# இஸ்ரேல் பிரதமர் இல்லத்தின் மீது ஹிஸ்புல்லா டிரோன் தாக்குதல்

**ஜெருசலேம், அக். 20-**

இஸ்ரேல் பிரதமர் இல்லத்தின் மீது ஹிஸ்புல்லா அமைப்பு டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் தடை செய்யப்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பு, ஈரான் ஆதரவுடன் லெபனானில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. காசாவில் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே நடந்து வரும் போரில், ஹமாஸ் அமைப்புக்கு ஹிஸ்புல்லா ஆதரவு தெரிவித்துள்ளது.

அதோடு இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் தொடர்ந்து ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு பதிலடியாக லெபனானில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இந்த மோதல் காரணமாக லெபனானில் சுமார் 12 லட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனிடையே, லெபனானில் இதுவரை நடந்த தாக்குதலில் 55 இஸ்ரேல் ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்திருந்தது. இந்த நிலையில், இஸ்ரேலின் கடற்கரை நகரமான சீசரியாவில் அமைந்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லம் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு படை தரப்பில் வெளியிடப்பட்டுள்ள தகவலின்படி, லெபனான் எல்லையை கடந்து இஸ்ரேலுக்குள் 3 டிரோன்கள் நுழைந்ததாகவும், அதில் 2 டிரோன்கள் இடைமறிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம், மற்றொரு டிரோன் கட்டிட சுவற்றை தாக்கியதாக கூறப்படுகிறது. இருப்பினும் இந்த சம்பவத்தின் போது பெஞ்சமின் நெதன்யாகுவும், அவரது மனைவியும் இல்லத்தில் இல்லை எனவும், இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

# விபத்தில் உயிரிழந்த தஞ்சை காவலர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, அக். 20-**

தஞ்சையில் நடந்த சாலை விபத்தில் விபத்தில் உயிரிழந்த குற்றப்புலனாய்வுத் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், பாப்பாநாடு சாலை விபத்தில் காவல் துறை தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் உயிரிழந்தார். அவரது குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், ரூ.25 லட்சம் நிவாரணம் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

"தஞ்சாவூர் மாவட்ட தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்த செந்தில்குமார் (வயது 49) என்பவர் நேற்று (19.10.2024) பிற்பகல் 3.15 மணியளவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவிட்டு திரும்பும் வழியில் இருசக்கர வாகனத்தில் பட்டுக்கோட்டை சென்றபோது, தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையில் கறம்பியம் அருகில் எதிரில் வந்த லாரி எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுக்கு உத்தரவிட வேண்டாம்:

# உண்ணாவிரதத்தை கைவிடுமாறு டாக்டர்களுக்கு மம்தா கோரிக்கை

**கொல்கத்தா, அக். 20-**

உண்ணாவிரதத்தை கைவிடுங்கள் என்று ஜூனியர் டாக்டர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ள மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, என்ன செய்ய வேண்டும் என்று அரசுக்கு ஆணையிடுவது ஏற்கத்தக்கது அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் ஆர்.ஜி. கார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றிய 31 வயது பயிற்சி பெண் டாக்டர் ஒருவர், கடந்த ஆகஸ்டு 9ம் தேதி அதிகாலையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, பின்னர் கொடூர கொலை செய்யப்பட்டது நாடு முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவத்தில் சஞ்சய் ராய் என்பவர் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கை போலீசார் விசாரித்த நிலையில், கொல்கத்தா ஐகோர்ட் உத்தரவையடுத்து, சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்த விவகாரத்தில், டாக்டர்களுக்கு பாதுகாப்பு கோரியும், பெண் டாக்டருக்கு நீதி வேண்டும் என கோரியும், கொல்கத்தாவில் பயிற்சி டாக்டர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே இந்த வழக்கில், ஆர்.ஜி. கார் மருத்துவக்கல்லூரியின் முன்னாள் முதல்வரான சந்தீப் கோஷ் மற்றும் தாலா காவல் நிலைய பொறுப்பு அதிகாரியான அபிஜித் மொண்டல் ஆகியோரை சி.பி.ஐ. கைது செய்தது.

இந்த சம்பவத்தைக் கண்டித்து உரிய நீதி வேண்டி டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். உயிரிழந்த டாக்டருக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், டாக்டர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஜூனியர் டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டாக்டர்களின் போராட்டம் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த நிலையில், செப். 16ம் தேதி மருத்துவக் குழுவுடன் முதல்வர் மம்தா பானர்ஜி பேச்சுவார்த்தை நடத்தினார். எனினும் அதில் டாக்டர்கள் கோரிக்கை முழுமையாக ஏற்கப்படவில்லை. இதனால் டாக்டர்கள் போராட்டமாக, உண்ணாவிரத போராட்டமாக மாறியது.

இன்றுடன் 15வது நாளாக ஜூனியர் டாக்டர்கள் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வரும் 22ம் தேதி மாநிலம் முழுவதும் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள டாக்டர்களிடம் தொலைபேசி மூலம் பேசிய மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி கூறியதாவது,

அனைவருக்கும் எதிர்ப்பு தெரிவிக்க உரிமை உள்ளது, ஆனால் அது சுகாதார சேவைகளை பாதிக்கக்கூடாது. தயவு செய்து உண்ணாவிரதத்தை கைவிடுங்கள். உங்கள் கோரிக்கைகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

மீதமுள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற எனக்கு இன்னும் மூன்று அல்லது நான்கு மாதங்கள் அவகாசம் கொடுங்கள். சில கோரிக்கைகளுக்கு கொள்கை முடிவுகள் தேவை. நாங்கள் முழு அளவில் ஒத்துழைப்போம். ஆனால் என்ன செய்ய வேண்டும் என்று அரசுக்கு ஆணையிடுவது ஏற்கத்தக்கது அல்ல." இவ்வாறு அவர் கூறினார். மேலும், டாக்டர்களின் கோரிக்கைகள் குறித்து மேலும் விவாதிக்க வரும் திங்கட்கிழமை அவர்களை சந்திக்க உள்ளதாக முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

# அடுத்த தலைவரை தேடும் பணியில் ஹமாஸ் தீவிரம்

## இஸ்ரேலுக்கு எதிராக போரை தொடர உறுதி

**காசா, அக். 20-**

இஸ்ரேலுக்கு எதிரான போரை தொடர அடுத்த தலைவரை தேடும் பணியில் ஹமாஸ் அமைப்பு தீவிரம் காட்டி வருகிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் 07-ம் தேதி இஸ்ரேலுக்குள் நுழைந்து, பாலஸ்தீனத்தின் காசா பகுதியை ஆளும் ஹமாஸ் பயங்கரவாதிகள், திடீர் தாக்குதல் நடத்தினர். இதில், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில், காசாவில், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து இஸ்ரேல் -ஹமாஸ் இடையே போர் ஓராண்டை தாண்டி நடைபெற்று வரும் நிலையில், கடந்த 16-ம் தேதி, காசாவின் தெற்கு பகுதியில் உள்ள ரபா மாவட்டத்தில், இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில், ஹமாஸ் பயங்கரவாத தலைவர் யாஹ்யா சின்வார், கொல்லப்பட்டார். ஹமாஸ் பயங்கரவாத அமைப்பும் உறுதிப்படுத்தி உள்ளது.

யஹ்யா சின்வரை இழந்து விட்டாலும் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தை தொடர்வோம் என்று ஹமாஸ் உறுதியேற்றுள்ளது. இதையடுத்து அடுத்த தலைவரை நியமிக்கும் பணியில் ஹமாஸ் அமைப்பு தீவிரம் காட்டி வருகிறது.

இதன்படி கத்தாரில் இருக்கும் ஹய்யா என்பவர் நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாயின. ஆனால் அவர் வெளிநாட்டில் இருந்து கொண்டு யுத்தத்தை நடத்துவது சரியாக இருக்காது யுத்த களத்தில் இருந்து செயல்படுபவரே அடுத்த தலைவராக வர அதிக சாத்தியக்கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

எனவே கொல்லப்பட்ட யஹ்யா சின்வரின் இளைய சகோதரர் முகம்மது சின்வரை அடுத்த ஹமாஸ் தலைவராக தேர்வு செய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. தவிர மேலும் சிலரின் பெயரும் பட்டியலில் இருப்பதால் விரைவில் ஹமாஸ் தலைவர் பெயர் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 33 பாலஸ்தீனியர்கள் பலி

**காசா, அக். 20-**

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர். இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது இஸ்ரேல் அரசு போர் அறிவித்தது. இதுவரை ஒப்பந்த அடிப்படையில் பணய கைதிகள் 100-க்கும் மேற்பட்டோரை இஸ்ரேல் மீட்டுள்ளது.

தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினரை முழுவதுமாக அழிக்கும் நோக்கில் காசாவில் உள்ள பல்வேறு பகுதிகள் மீது இஸ்ரேல் ராணுவம் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்த தாக்குதல்களில் இதுவரை சுமார் 42 ஆயிரத்துக்கு அதிகமான பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், வடக்கு காசா பகுதியில் உள்ள ஜபாலியா முகாம் மீது நேற்று முன்தினம் மாலை இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 33 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்ததாக காசா அரசு ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 21 பெண்கள் அடங்குவர் என்றும் இடிபாடுகள் மற்றும் கட்டிடங்களுக்கு அடியில் சிக்கி பலர் பாதிக்கப்பட்டதால் உயிரிழப்பு 50-ஐ நெருங்கும் என அஞ்சப்படுகிறது. மேலும் இந்த தாக்குதலில் 85 பேர் காயமடைந்தனர். அவர்களில் சிலருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டதாக ஊடக அலுவலகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் குறித்து இஸ்ரேல் ராணுவம் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

# இந்திய தூதரகத்தை மூட வலியுறுத்தி கனடாவில் சீக்கிய அமைப்புகள் பேரணி

**ஒட்டாவா, அக். 20-**

இந்திய தூதரகத்தை மூட வலியுறுத்தி கனடாவில் வான்கோவெரிலுள்ள இந்திய தூதரக அலுவலகம் முன் சீக்கிய அமைப்புகள் பேரணியாக திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தியா மற்றும் கனடா இடையே பல ஆண்டு கால நட்புறவு உள்ளது. இந்த உறவு கடந்த ஆண்டில் இருந்து கசப்பானதாக மாறி வருகிறது. இதற்கு காரணம் காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கனடாவில் வைத்து கொல்லப்பட்டது ஆகும்.

இந்த விவகாரத்திற்கு பின்னால் இந்திய அரசுதான் இருப்பதாக கனடா பிரதமர் திட்டவட்டமாக குற்றம் சாட்டி இருந்தார். இதனால் இந்தியா, கனடா இடையேயான உறவில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு விரிசல் ஏற்பட்டுள்ளது.

கனடா பிரதமரின் செயலுக்கு கண்டனம் தெரிவித்து, இந்தியாவில் உள்ள கனடா தூதர் உள்ளிட்ட 6 அதிகாரிகள் வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டது. இதற்கு பதிலடி நடவடிக்கையாக கனடாவுக்கான இந்திய தூதர் உள்பட கனடாவிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் உடனடியாக வெளியேற கனடா அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவுடனான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு அவரது கட்சிக்குள்ளேயே நெருக்கடி அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான கனடா அரசின் நடவடிக்கைகளை அங்குள்ள சீக்கிய அமைப்புகள் வரவேற்றுள்ளன.

மேலும், கனடாவில் உள்ள இந்திய தூதரகங்களை நிரந்தரமாக மூட சீக்கிய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கனடாவின் வான்கோவெர் பகுதியில் அமைந்துள்ள இந்திய தூதரக அலுவலகம் முன் வான்கோவெரைச் சேர்ந்த சீக்கிய சமூகத்தினர் நேற்று முன்தினம் பேரணியாகச் சென்று வான்கோவெரிலுள்ள இந்திய தூதரக அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, வான்கோவெர் மற்றும் டோரண்டோவில் உள்ள இந்திய தூதரகங்களை நிரந்தரமாக மூட சீக்கிய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.




**20-10-2024**

**மேஷம்:-** எதிர்பாராத விதமாக தனவரவும் குடும்ப சுகம் குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது வம்புகளை தவிர்க்க உதவும்.

**ரிஷபம்:-** தொழிலில் புதிய முதலீடுகளால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இனிய பயணங்களால் இன்பம் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். தெய்வீக காரிய ஈடுபாடு, தான தரும சிந்தனை ஏற்படும்.

**மிதுனம்:-** பதவி அல்லது இடமாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே வேண்டாத மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**கடகம்:-** பெண்களின் உதவியால் பெருமை அடைவீர்கள். மற்றவர்களுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். பிரிந்திருந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர்.

**சிம்மம்:-** உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என யோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**கன்னி:-** தெய்வ தரிசனப் பயணங்கள் திருப்தி தரும். அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும்.

**துலாம்:-** வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்து கொள்வது நல்லது. நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

**விருச்சிகம்:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் நல்முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

**தனுசு:-** வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். சந்ததி விருத்தி உண்டாகும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**மகரம்:-** குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை எடுக்க வேண்டிய நாள். மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாமல் அனுசரித்து சென்றால் அனுகூலமான நன்மைகளை அடையலாம்.

**கும்பம்:-** இன்றைய நாள் கழிவது யுகங்கழிவது போன்றிருக்கும். தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை கொள்ளுங்கள். நீர்நிலைகளில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

**மீனம்:-** அரசு அதிகாரிகளின் ஆதரவு எப்போதும் இருக்கும். அரசு உயர் பதவிகள் தேடிவரும். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை மற்றும் தைரியம் அதிகரிக்கும்.

# இந்து ஒருவரை துணை முதல்வர் ஆக்கியுள்ளோம்

## முதல்வர் உமர் அப்துல்லா பேச்சு

**ஜம்மு, அக். 20-**

எங்களை முஸ்லிம் கட்சி என்றார்கள்; இந்து ஒருவரை துணை முதல்வர் ஆக்கியிருக்கிறோம்: உமர் அப்துல்லா

ஜம்மு மற்றும் காஷ்மீரின் முதல்வர் உமர் அப்துல்லா, ஜம்முவில் கட்சி தொண்டர்களிடையே நேற்று பேசினார். அவர் பேசும்போது, கடந்த தேர்தலின்போது, தேசியவாத மாநாட்டு கட்சி முஸ்லிம்களுக்கான கட்சி என எல்லோரும் கூறி வந்தனர். இது காஷ்மீரிகளுக்கான ஓர் அமைப்பு என்றும் கூறினர்.

ஆனால், ஜம்முவில் இருந்து ஒருவரை துணை முதல்வராக ஆக்கியிருக்கிறோம். அவர் ஓர் இந்து. அவர்கள் தற்போது என்ன கூறுவார்கள்? என்று பேசியுள்ளார். 10 ஆண்டுகளுக்கு பின் மற்றும் 370-வது சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட பின்னர் ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடந்த முதல் சட்டசபை தேர்தல் இதுவாகும். இதில், தேசியவாத மாநாட்டு கட்சி 42 இடங்களை கைப்பற்றியது. காங்கிரஸ் 6 இடங்களில் வெற்றி பெற்றது. பா.ஜ.க. 29 இடங்களில் வெற்றி பெற்றது. ஜம்முவின் அனைத்து பகுதிகளிலும் அக்கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

பெரும்பான்மை இடங்களை கைப்பற்றிய தேசியவாத மாநாட்டு கட்சியை சேர்ந்த உமர் அப்துல்லா முதல்வராகவும் , அக்கட்சியை சேர்ந்த சுரீந்தர் குமார் சவுத்ரி, துணை முதல்வராகவும் பதவி ஏற்று கொண்டனர்.

# ஏர் இந்தியா விமானத்திற்கு திடீர் வெடிகுண்டு மிரட்டல்

## ஜெய்ப்பூரில் அவசர தரையிறக்கம்

**ஜெய்ப்பூர், அக். 20-**

துபாய்க்கு புறப்பட்ட ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததையடுத்து ஜெய்ப்பூரில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் விமான நிலையத்தில் இருந்து 189 பயணிகளுடன் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் நேற்று துபாய் நோக்கி சென்று கொண்டிருந்தது. இந்த விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததை தொடர்ந்து அதிகாலை 1.20 மணியளவில் ஜெய்ப்பூருக்கு திருப்பி விடப்பட்டது.

ஜெய்ப்பூர் விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்ட விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் ஊழியர்கள் பாதுகாப்பாக இறக்கி விடப்பட்டனர். இதற்கிடையில் விமான நிலையத்தில் தயாராக இருந்த வெடிகுண்டு நிபுணர்கள் விமான முழுவதும் சோதனை மேற்கொண்டனர். இந்த இந்த சோதனையில் சந்தேகத்திற்குரிய வகையில் எந்த பொருளும் கிடைக்காததால் வெடிகுண்டு மிரட்டல் போலியானது என்பதை அதிகாரிகள் உறுதி செய்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கோவையில் பயங்கரம்: சிறுத்தை தாக்கி சிறுமி பலி

**கோவை, அக். 20-**

கோவையில் சிறுத்தை தாக்கி சிறுமி உயிரிழந்தார். தாயின் கண்முன்னே நடந்த இந்த சோக நிகழ்வு அரங்கேறியுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தை சேர்ந்தவர் அனுல் அன்சாரி. இவர் கோவை மாவட்டம் வால்பாறை அருகே ஊசி மலை எஸ்டேட் பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் வேலை பார்த்து வருகிறார். அனுல் அன்சாரியின் மகள் அப்சரா. 6 வயதான சிறுமி, அப்பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் தனது தாயுடன் நின்றுகொண்டிருந்தார். அப்போது அங்கே பதுங்கி இருந்த சிறுத்தை, திடீரென சிறுமி அப்சராவை கடித்து இழுத்துச்சென்றது. இதைக்கண்டு சிறுமியின் தாய் அதிர்ச்சியில் உறைந்து போனார். சிறுத்தை கடித்ததில் சிறுமி அப்சரா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து சம்பவம் நடந்த பகுதிக்கு வந்த காவல் மற்றும் வனத்துறையினர், சிறுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், சம்பவம் குறித்து விசாரித்து வருகின்றனர். சிறுத்தையை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வனத்துறையினரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

**மரம் மனிதனின் உரம்**

# அம்பாசமுத்திரத்தில் இன்று அ.தி.மு.க. 53-வது ஆண்டு விழா பொதுக்கூட்டம்

## எடப்பாடி பழனிசாமி பங்கேற்பு

நெல்லை, அக். 20-

அ.தி.மு.க. 53-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு நெல்லை புறநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதியில் இசக்கி சுப்பையா எம்.எல்.ஏ. தலைமையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடக்கிறது. இந்த பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றுகிறார்.

இதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று மாலை 4 மணிக்கு எடப்பாடி பழனிசாமி தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வந்தடைகிறார். அங்கு அவருக்கு தூத்துக்குடி மாவட்ட செயலாளர்கள் சண்முகநாதன், கடம்பூர் ராஜூ எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர்.

அதனை தொடர்ந்து அங்கிருந்து கார் மூலம் நெல்லை மேலப்பாளையம் வழியாக அம்பைக்கு செல்கிறார். அங்கு அவருக்கு புறநகர் மாவட்ட செயலாளர் இசக்கி சுப்பையா எம்.எல்.ஏ. தலைமையில் நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர்.

முன்னதாக அவர் சேரன் மகாதேவியில் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு அம்பையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். இந்த பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி சில முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார் என்று கூறப்படுகிறது.

மேலும் கட்சியின் பொதுக்குழுவை கூட்டுதல், உட்கட்சி தேர்தல், கட்சியின் வளர்ச்சி பணிகள் என பல முக்கிய முடிவுகளை எடப்பாடி பழனிசாமி இந்த பொதுக்கூட்டத்தில் அறிவிக்க வாய்ப்பு இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுக்கூட்டத்தில் பேசி முடித்த பின்னர் அங்கிருந்து மீண்டும் மேலப்பாளையம் வழியாக நெல்லை மாநகருக்கு செல்லும் எடப்பாடி பழனிசாமிக்கு, மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் தச்சை கணேசராஜா தலைமையில் வண்ணார்பேட்டை செல்லபாண்டியன் மேம்பாலம் அருகே பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து நெல்லை மாநகராட்சி எதிரே அமைந்துள்ள வர்த்தக மையத்தில் நடைபெறும் கட்சி நிர்வாகி இல்ல திருமண விழாவில் பங்கேற்கும் எடப்பாடி பழனிசாமி சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டு சந்திப்பு ரயில் நிலையத்தை அடைகிறார்.

அங்கிருந்து இரவில் ரயில் மூலம் அவர் சேலத்திற்கு புறப்பட்டு செல்கிறார். எடப்பாடி பழனிசாமியின் வருகையையொட்டி அவரை வரவேற்க நெல்லை மாவட்டம் முழுவதும் அ.தி.மு.க. தொண்டர்கள் தீவிர ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# மெக்சிகோ நிதி அமைச்சருடன் நிர்மலா சீதாராமன் சந்திப்பு



மெக்சிகோ சிட்டி, அக். 20-

அரசு முறை பயணமாக மெக்சிகோ சென்றுள்ள மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், அந்நாட்டு நிதியமைச்சர் ரமிரஸ் டி லா ஒ-வை சந்தித்து பேசினார்.

அரசு முறை பயணமாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மெக்சிகோ சென்றுள்ளார். அவர் மெக்சிகோவில் இந்தியர்களை சந்தித்தார். மேலும், மெக்சிகோ சிட்டியில் நடைபெற்ற இந்திய - மெக்சிகோ இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார்.

இந்நிலையில், மெக்சிகோ நிதி அமைச்சர் ரமிரஸ் டி லா ஒ-வை நிர்மலா சீதாராமன் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவது, டிஜிட்டல் பரிவர்த்தனை தொடர்பான தொழில்நுட்ப பகிர்வு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு நிதி அமைச்சர்களும் ஆலோசனை நடத்தினர். மெக்சிகோ பயணத்தை முடித்து கொண்டு நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் அமெரிக்கா செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 52 ஆயிரம் பேர் ஆன்லைனில் முன்பதிவு: சபரிமலை ஐயப்பன் கோவிலில் பக்தர்களின் வருகை அதிகரிப்பு

## தரிசனத்திற்கு பல மணிநேரம் காத்திருப்பு

திருவனந்தபுரம், அக். 20-

சபரிமலை ஐயப்பன் கோவிலில் பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளது. இதனால் பக்தர்கள் பல மணி நேரம் வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

ஐப்பசி மாத பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை கடந்த 16-ம் தேதி மாலை திறக்கப்பட்டது. நாளை 21-ம் தேதி இரவு வரை கோவில் நடை திறந்திருக்கும். வழக்கமாக மண்டல, மகர விளக்கு காலங்களில் தான் சபரிமலையில் பக்தர்கள் வருகை கட்டுக்கடங்காமல் இருக்கும். மாத பூஜைகளின்போது பக்தர்கள் குறைவாகவே வருவார்கள். மாத பூஜை நடைபெறும் நாட்களில் அதிகபட்சமாக 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே தரிசனத்திற்கு வருவது வழக்கம்.

ஆனால் தற்போது ஐப்பசி மாத பூஜைகளுக்காக நடை திறக்கப்பட்ட அன்று முதலே பக்தர்கள் வருகை மிக அதிகமாக உள்ளது. நேற்று முன்தினம் தரிசனத்திற்காக வந்திருந்த பக்தர்கள் பல மணி நேரம் வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று காலை வரையிலும் பக்தர்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

இன்று வரை 52 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் ஆன்லைனில் முன்பதிவு செய்துள்ளனர். இதனால் இந்த இரு நாட்களிலும் தரிசனம் செய்வதற்கு பல மணி நேரம் பக்தர்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். ஐப்பசி மாதத்திலேயே பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளதால் மண்டல காலம் தொடங்க உள்ள அடுத்த மாதம் பக்தர்கள் மிக அதிக அளவில் சபரிமலை வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பெங்களூருவில் இன்று கன்னடர்-தமிழர் மாநாடு

பெங்களூரு, அக். 20-

பெங்களூருவில் உள்ள அரண்மனை மைதானத்தில் கன்னடர் - தமிழர் ஒற்றுமை மாநாடு இன்று நடைபெறுகிறது.

இது குறித்து தாய்மொழி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், இம்மாநாட்டின் ஏற்பாட்டாளருமான எஸ்.டி.குமார் கூறியதாவது:

கர்நாடக மாநிலம் முழுவதும் லட்சக்கணக்கான தமிழர்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். கன்னட மொழியை நன்றாக கற்றுக் கொண்டு இந்த மண்ணின் கலாச்சாரத்தை போற்றி வருகின்றனர். இருப்பினும் தமிழர்கள், கன்னடர்களுக்கு எதிரிகள் போல சித்தரிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையை மாற்றி, இரு மொழியினரிடமும் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளேன்.

இதற்காக கடந்த 6 மாதங்களாக கர்நாடகா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு தமிழ் அமைப்புகளையும் கன்னட அமைப்புகளையும் சந்தித்து பேசியுள்ளேன். கட்சி, சாதி, மத பேதமின்றி தமிழர்களும் கன்னடர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்க சம்மதித்தனர்.

பெங்களூரு அரண்மனை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தொடங்கி மாலை 5.30 மணி வரை மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டை முதல்வர் சித்தராமையா தொடங்கி வைத்து விழா உரையாற்றுகிறார். மத்திய அமைச்சர் குமாரசாமி, துணை முதல்வர் டி.கே.சிவகுமார், முன்னாள் முதல்வர் எடியூரப்பா உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

மாநாட்டில் இரு மொழிகளை சேர்ந்த கவிஞர்களின் கவியரங்கம், தமிழர் வரலாறு குறித்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கர்நாடகா முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்பார்கள் என எதிர்ப்பார்க்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# டெல்லியில் நாளுக்கு நாள் மோசமடையும் காற்றின் தரம்

புது டெல்லி, அக். 20-

டெல்லியில் நாளுக்கு நாள் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெல்லியில் குளிர்காலம் தொடங்கியது முதலே காற்று மாசு அதிகரித்து காணப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் காற்றின் தரம் இப்படித்தான் மோசமடையும். இந்நிலையில், டெல்லியில் கடந்த சில நாட்களாக காற்று மாசு அதிகரித்து வருகிறது.

மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவுகளின்படி, கடந்த 24 மணி நேரத்தில் டெல்லியில் காற்று தரக் குறியீடு 273 ஆக பதிவாகியுள்ளது. காற்றின் தரம் மோசமான பிரிவில் இருந்ததால், டெல்லியில் நேற்று காலை புகை மூட்டமாக காணப்பட்டது. சில பகுதிகளில் காற்றின் தரம் மோசமாக இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும், முண்ட்கா மற்றும் பவானாவில் காற்றின் தரக்குறியீடு 366 ஆகவும், வஜிர்பூரில் 355, ஜஹாங்கிர்புரில் 347 மற்றும் ஆனந்த் விஹார் பகுதியில் 333 ஆகவும் பதிவாகியுள்ளது. இந்த அனைத்து பகுதிகளிலும் காற்றின் தரம் மிகவும் மோசமான பிரிவில் உள்ளதாக தரவு காட்டுகிறது.

காற்று மாசை கட்டுப்படுத்த டெல்லி அரசு பல பகுதிகளில் தண்ணீரை பீய்ச்சி காற்றின் தரத்தை மேம்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகிறது. காற்றின் தரம் 50-க்கு கீழ் இருந்தால் நல்லது. 51 முதல் 100 வரை இருந்தால் திருப்தி. 101 முதல் 200-க்கு இடையே இருந்தால் அது மிதமானது.

201 முதல் 300 இடையே இருந்தால் அது மோசமானது, 301 மற்றும் 400 இடையே இருந்தால் மிக மோசமானது என வகைப்படுத்தப்பட்டுள்ளது. டெல்லியில் குறைந்தபட்ச வெப்பநிலை 20.2 டிகிரி செல்சியசாக பதிவாகியுள்ளது. இது இயல்பை விட 1.8 புள்ளிகள் அதிகமாக உள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# கை கொடுத்த ஏ.ஐ. தொழில்நுட்பம்: 60 யானைகளின் உயிரை காப்பாற்றிய ரயில் டிரைவர்

திஸ்புர், அக். 20-

அசாம் மாநிலத்தில் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.,) தொழில்நுட்பம் உதவியால், தண்டவாளத்தை கடந்த 60 யானைகளின் உயிரை ரயில் டிரைவர் காப்பாற்றி உள்ளார்.

நாட்டின் பல மாநிலங்களில் யானைகள் ரயிலில் அடிபட்டு உயிரிழக்கும் சம்பவங்கள் நடக்கின்றன. இது போன்ற சம்பவங்களை தடுக்கும் பொருட்டு மத்திய அரசு தொழில்நுட்பம் உதவியுடன் சில முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன்படி, செயற்கை நுண்ணறிவு என்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்கு வங்கம், அசாம், ஒடிசா ஆகிய மாநிலங்களிலும், தமிழகத்தில் கோவையிலும் கஜ்ராஜ் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி உள்ளது.

அதன்படி அசாமில் தண்டவாளத்தை கடந்த 60 யானைகளின் உயிர் காப்பாற்றப்பட்டு இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

கவுகாத்தியில் இருந்து லும்டிங் பகுதிக்கு காம்ரூப் எக்ஸ்பிரஸ் ரயில் சென்று கொண்டிருந்தது. ஹபாய்பூர், லம்சக்ஹாங் ரயில் நிலையங்கள் இடையே இந்த ரயில் வந்தபோது, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் யானைகள் தண்டவாளத்தை கடக்கும் எச்சரிக்கை அறிவிப்பு இயங்கியது.

உடனடியாக சுதாரித்த ரயில் டிரைவர் தாஸ், உதவி ரயில் டிரைவர் உமேஷ் குமார் இருவரும் எமர்ஜென்சி பிரேக்குகளை பயன்படுத்தி ரயிலை நிறுத்தி உள்ளனர். அப்போது 60-க்கும் மேற்பட்ட யானைகள், தங்கள் குட்டிகளுடன் தண்டவாளத்தை கடந்து மறுபுறம் சென்றன.

ரயிலில் இருந்து இறங்கிய டிரைவர் மற்றும் ரயில்வே ஊழியர்கள் யானைகள் கூட்டம் தண்டவாளத்தை கடந்து வனப்பகுதிக்குள் சென்று விட்டதா என்பதை நேரிடையாக சென்று உறுதிப்படுத்தினர்.

அதன் பின்னர் ரயில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. இந்த சம்பவம் வீடியோவாக பதிவு செய்யப்பட்டு வலைதளங்களில் வெளியாகி உள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் 60-க்கும் மேற்பட்ட யானைகளின் உயிர் காப்பாற்றப்பட்டு உள்ளது.

சரியான நேரத்தில் சுதாரித்து யானைகளின் உயிரை காப்பாற்றிய ரயில் டிரைவர்களுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

# வயநாடு தொகுதி இடைத்தேர்தல்: 23-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்கிறார் பிரியங்கா காந்தி

திருவனந்தபுரம், அக். 20-

வயநாடு தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தி தனது வேட்பு மனுவை வரும் 23-ம் தேதி தாக்கல் செய்கிறார்.

நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கேரள மாநிலம் வயநாடு மற்றும் உத்தரபிரதேச மாநிலம் ரேபரேலி தொகுதிகளில் போட்டியிட்டார். இந்த 2 தொகுதிகளிலும் ராகுல்காந்தி அபார வெற்றி பெற்றார்.

அதே வேளை, ராகுல் காந்தி ஏதேனும் ஒரு தொகுதியில் எம்.பி. பதவியை ராஜினாமா செய்வார் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி, வயநாடு எம்.பி. பதவியை ராஜினாமா செய்வதாக ராகுல் காந்தி அறிவித்தார்.

இதையடுத்து, வயநாடு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டு, அங்கு இடைத் தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து வயநாடு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி போட்டியிடுவார் என காங்கிரஸ் அறிவித்தது.

இதன் மூலம் பிரியங்கா காந்தி முதல் முறையாக தேர்தலில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். வயநாடு தொகுதிக்கு வரும் நவம்பர் 13-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதையடுத்து தேர்தல் நடத்தை விதிகள் அங்கு உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.

வயநாடு தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ், பாரதிய ஜனதா மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சிகள் போட்டியிடுகின்றன. காங்கிரஸ் கட்சி சார்பில் பிரியங்கா காந்தியும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் சத்யன் மொகேரியும் போட்டியிடுகின்றனர். பாரதிய ஜனதா சார்பில் போட்டியிடப்போவது யார்? என்பதை அந்த கட்சி இன்னும் அறிவிக்கவில்லை.

இந்தநிலையில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தி வயநாடு தொகுதியில் தனது தேர்தல் பிரச்சாரத்தை அடுத்த வாரம் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது. இதற்காக அவர் வருகிற 22-ம்தேதி கேரளா வருகிறார். மறுநாள் 23-ம் தேதி தனது வேட்பு மனுவை தாக்கல் செய்யும் அவர், பின்பு பிரச்சாரத்தை தொடங்க உள்ளார்.

அவர் வயநாடு தொகுதியில் 10 நாட்கள் வரை பிரச்சாரத்தில் ஈடுபடலாம் என்று கூறப்படுகிறது. அப்போது பிரியங்கா காந்தியுடன், ராகுல் காந்தியும் உடன் வந்து பிரச்சாரம் செய்ய உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதனிடையே வயநாடு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் தொடங்கியது. வருகிற 25-ம் தேதி வேட்புமனு தாக்கலுக்கு கடைசி நாளாகும். வேட்புமனுவை திரும்பப்பெற வருகிற 30-ம் தேதி கடைசி நாளாகும். இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நவம்பர் 13-ம் தேதி நடைபெற உள்ள நிலையில், வாக்கு எண்ணிக்கை நவம்பர் 23-ம் தேதி நடைபெறுகிறது.

# முழு கொள்ளளவை எட்டிய வீராணம் ஏரி: அமைச்சர் பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு

கடலூர், அக். 20-

மழை காரணமாக வேகமாக நிரம்பி வரும் காட்டு மன்னார்கோவில் வீராணம் ஏரியை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் .

கடலூர் மாவட்டத்தில் மிகப்பெரிய நீர் ஆதாரமாக இருப்பது காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள வீராணம் ஏரி ஆகும். இந்த ஏரி மூலம் கடலூர் மாவட்ட காவிரி டெல்டா பகுதிகளான காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி வட்டப் பகுதியில் 44 ஆயிரத்து 856 ஏக்கர் பாசனம் பெறுகின்றன.

இதன் மூலம் இப்பகுதி விவசாய மற்றும் விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஏரியின் முழு கொள்ளளவு 47.50 அடியாகும். காவிரி தண்ணீர் கீழணையில் இருந்து வடவாறு வழியாக ஏரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஏரி நிரப்பப்படும்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் கடலூர் மாவட்ட பகுதிகளும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் ஏரிக்கு காட்டாறுகள் மூலம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

கீழணையில் இருந்து வடவாறு மூலமாகவும் ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் ஏரி நிரம்பி முழு கொள்ளளவான 47.50 அடியை எட்டியுள்ளது.

இந்த நிலையில் நேற்று காலை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வீராணம் ஏரியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது சிதம்பரம் நீர்வளத்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# தீபாவளி பண்டிகை: புதுவையில் 5 நாட்கள் விடுமுறை அறிவிப்பு

புதுச்சேரி, அக். 20-

தீபாவளி பண்டிகையை ஒட்டி புதுச்சேரியில் தொடர்ச்சியாக 5 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 31-ம் தேதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புதுச்சேரியில் வரும் 30-ம் தேதி முதல் நவம்பர் 3-ம் தேதி வரை 5 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.வழக்கமாக தீபாவளிக்கு முந்தைய நாள் விடுமுறை விடும் நிலையில் புதுவை விடுதலை நாள் உள்ளிட்ட 5 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 2-ம் தேதி கல்லறை நாள், நவம்பர் 3-ம் தேதி ஞாயிறு என மொத்தம் 5 நாட்கள் தீபாவளியை முன்னிட்டு புதுவையில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுப்ரீம் கோர்ட் மக்களின் கோர்ட்; அது பாதுகாக்கப்பட வேண்டும்

## தலைமை நீதிபதி சந்திரசூட் பேச்சு

பனாஜி, அக். 20-

சுப்ரீம் கோர்ட் மக்களின் நீதிமன்றமாக உள்ளதாகவும் அது அவ்வாறே பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி டி ஒய் சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

கோவாவில் நடந்த சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர்கள் பதிவு சங்கத்தின் (SCAORA) முதல் மாநாட்டில் உரையாற்றிய தலைமை நீதிபதி சந்திரசூட், "கடந்த 75 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சுப்ரீம் கோர்ட்டின் நீதிக்கான அணுகல், நாம் தவறவிடக் கூடாத ஒன்று. சமூகங்கள் வளர்ச்சியடைந்து, செழுமையாகவும், செல்வச் செழிப்பாகவும் பரிணமிக்கும் போது, மிக முக்கிய நபர்கள் தொடர்பான வழக்கை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்து உள்ளது. நமது நீதிமன்றம் அப்படிப்பட்டது அல்ல. நமது நீதிமன்றம் மக்கள் நீதிமன்றம். மக்கள் நீதிமன்றமாக சுப்ரீம் கோர்ட்டின் பங்கு எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

மக்கள் நீதிமன்றமாக இருப்பதால், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பங்கை நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று சொல்ல முடியாது. தங்களுக்கு சாதகமாகத் தீர்ப்பளிக்கும்போது சுப்ரீம் கோர்ட் ஓர் அற்புதமான நிறுவனம் என்று நினைப்பவர்கள், அதுவே அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கும் போது அதனை ஒரு கேவலமான நிறுவனமாகப் பார்க்கிறார்கள். இது ஒரு ஆபத்தான கருத்து.

சுப்ரீம் கோர்ட்டின் பணியை விளைவுகளின் கண்ணோட்டத்தில் நீங்கள் பார்க்க முடியாது. தனிப்பட்ட வழக்குகளின் முடிவு உங்களுக்கு சாதகமாக இருக்கலாம் அல்லது உங்களுக்கு எதிராக இருக்கலாம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுதந்திர உணர்வுடன் நீதிபதிகள் முடிவெடுக்க உரிமை உண்டு. சட்டத்தின் முரண்பாடு அல்லது பிழைக்காக நீதிமன்றத்தை விமர்சிக்க ஒருவருக்கு உரிமை உண்டு. நீதிபதிகளுக்கு இதில் எந்த சிரமமும் இல்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் அதன் பங்கை அல்லது அதன் வேலையை விளைவுகளின் கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது என்று தெரிவித்தார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் 3 பேரின் ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி: சென்னை முதன்மை அமர்வு உத்தரவு

சென்னை, அக். 20-

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள 3 பேரின் ஜாமின் மனுக்கள் தள்ளுபடி செய்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை 5-ம் தேதி கொலை செய்யப்பட்டார். ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் இதுவரை 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த விக்னேஷ் குமார், விஜயகுமார் மற்றும் திருவள்ளூர் நத்தமேடு நகரைச் சேர்ந்த சதீஷ் குமார் ஆகியோர் ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

தங்களுக்கும் இந்த கொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று தங்களது மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு முதன்மை நீதிமன்ற அமர்வு நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மாநகர குற்றவியல் வழக்கறிஞர் தேவராஜன் ஆஜராகி சம்மந்தப்பட்ட மனுதாரர்கள் மூன்று பேரும் வெடிகுண்டுகள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்றும், இவர்களுக்கு எதிராக குண்டர் தடுப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டு , கைது செய்யப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் கூறினார்.

ஆகையால் குற்றவாளிகள் 3 பேருக்கும் ஜாமின் வழங்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, மூன்று பேரது ஜாமீன் வழக்குகளையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கை கடற்படை கைது செய்த 17 தமிழக மீனவர்கள் நாடு திரும்பினர்

சென்னை, அக். 20-

இலங்கை கடற்படை கைது செய்த 17 இந்திய மீனவர்கள் இந்தியா திரும்பி விட்டதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் 17 பேரை இலங்கை கடற்படை கைது செய்திருந்தது. இதனைத் தொடர்ந்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்களின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், 17 மீனவர்களையும் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இரு நாட்டினரும் கவனக்குறைவாக கடல் எல்லையை மீறுவதாக கூறி, இருநாட்டு மீனவர்களும் அடிக்கடி கைது செய்யப்படுகிறார்கள். குறிப்பாக, இலங்கை கடற்பரப்பில் நுழையும் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடுகூட சில சமயங்களில் இலங்கை கடற்படை துப்பாக்கிச்சூடு நடத்துகிறது. இலங்கை கடற்படையின் அதிகாரபூர்வ வெளியீட்டின்படி, நடப்பாண்டில் மட்டும் 413 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களின் 55 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழர்களின் நிலத்தையும், வளத்தையும், உடல் உழைப்பையும் உறிஞ்சி ஆண்டிற்கு 2,378 கோடி நிகர இலாபம் ஈட்டும் நெய்வேலி நிலக்கரி நிறுவனம், ஒப்பந்த பணியாளர்கள் அனைவரையும் உடனடியாகப் பணி நிரந்தரம் செய்து, சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். தீபாவளியை முன்னிட்டு ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டும்.

- சீமான்



ஈஷா அறக்கட்டளை ஆசிரமத்தின் மீதான குற்றவியல் மற்றும் உரிமையியல் புகார்களை முழுமையாக விசாரித்து, உண்மை நிலவரத்தை நாட்டுக்கும், மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும். குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடாமல் தண்டிக்கப்பட வேண்டும்.

- முத்தரசன்



கவர்னர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் மிகவும் மோசமாக உள்ளன. அவர் ஒரு கவர்னர்தான், சர்வாதிகாரி அல்ல. இதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். தன்னால் எதுவும் செய்ய முடியும் என்றும் அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். இதை ஜனாதிபதி கவனித்து, கவர்னர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெற வேண்டும்.

- டி.ராஜா



அதிக அளவில் மது வணிகம் நடைபெறும் கடைகளில் கூடுதல் விற்பனைக் கவுண்டர்களை திறப்பதென்பது மது வணிகம் அதிகரிப்பதற்கே வழிவகுக்கும். இம்முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும். மாறாக, படிப்படியாக மதுக்கடைகளை மூடி தமிழ்நாட்டில் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அன்புமணி

அருப்புக்கோட்டை அருகே அரசு கலைக்கல்லூரியில்

# மாணவ-மாணவியர்கள் 296 பேருக்கு பட்டங்களை வழங்கினார் அமைச்சர்



அருப்புக்கோட்டை, அக். 20-

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே செட்டி குறிச்சியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று இரண்டாவது பட்டமேற்பு விழா நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவில் அரசு கலைக்கல்லூரி முதல்வர் அந்தோணி டேவிட் நாதன் வரவேற்று பேசினார். மதுரை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் குணசேகரன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். செட்டிகுறிச்சி பஞ்சாயத்து தலைவர் பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கலந்து கொண்டு பட்டப்படிப்பு முடித்த 296 மாணவ மாணவியர்களுக்கு பட்டம் வழங்கி கௌரவித்தார். இந்த பட்டம் ஏற்பு விழாவின்போது பட்டம் முடித்த மாற்றுத்திறனாளி மாணவர் ஒருவரை அவரது நண்பர்கள் இருவர் தங்கள் கைகளால் சுமந்து சென்று அமைச்சரிடம் பட்டம் பெற செய்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், உங்களையெல்லாம் பார்க்கும்போது எனக்கு பொறாமையாக உள்ளது. நான் படிக்கும்போது இப்படி எனக்கு கிடைக்கவில்லை. ஆனால் இப்போ இந்த அங்கியை நான் அணிந்து இருக்கிறேன். இப்போ தான் உலகம் போட்டியான உலகம். பட்டப் படிப்பு படித்தால் மட்டும் போதாது. திறமையும் இருக்க வேண்டும். மாணவர்கள் மேலும் மேலும் படித்து தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்ல அறிவாளிகளாக நல்ல விஞ்ஞானிகளாக நாட்டை காப்பார்கள் ஆக நீங்கள் வரவேண்டும்.

தற்போது அனைத்திலும் பெண் பிள்ளைகள் தான் முன்னணியில் உள்ளனர். மாணவர்கள் அவர்களுடன் போட்டி போட முடிவதில்லை. மாணவர்கள் இதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இருவரும் சரிசமம் தான் இருவரும் முன்னேறி வரவேண்டும். இந்த கல்லூரிக்கு என்னென்ன தேவைகள் உள்ளது என முதல்வர் என்னிடம் மனு அளித்துள்ளார். தேவையான அனைத்தையும் உரிய நேரத்தில் செய்து தருவேன் என பேசினார். நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, திமுக கிளைச் செயலாளர் பாலகணேஷ் ,பொன்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் கொப்பையா ராஜ் ,முன்னாள் நகர மன்ற தலைவர் சிவப்பிரகாசம் ,நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி ,நகரக் கழகச் செயலாளர் ஏ கே மணி மற்றும் அரசு கலைக் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

# திருமலைக்கேணியில் கார்த்திகை விழா



நத்தம், அக். 20-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணியில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஐப்பசி மாத கார்த்திகை பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருக பெருமானுக்கு 16 வகையான சிறப்பு அபிஷேகங்களும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது. சர்வ அலங்காரத்தில் முருகப் பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து கோவிலை சுற்றி சுவாமி புறப்பாடு நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு புனித நீராடி முருகப் பெருமானை தரிசனம் செய்தனர். மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் பக்தர்கள் விளக்கேற்றி வழிபாடுசெய்தனர். இதைப்போலவே நத்தம்-கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும் கார்த்திகையையொட்டி பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

# கள்ளிக்குடி சூளை கருப்பசாமி கோவில் பூஜை விழா: ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பிரியாணி பிரசாதம்



திருமங்கலம், அக். 20-

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகேயுள்ள கள்ளிக்குடியில் நடைபெற்ற சூளை கருப்பசாமி கோவில் பூஜை விழாவில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பிரியாணி பிரசாதம் வழங்கப்பட்டது.

திருமங்கலம் அருகேயுள்ள கள்ளிக்குடியில் சூளை கருப்பசாமி கோவில் 9வது ஆண்டு பூஜை விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதையொட்டி ஆண்டுதோறும் ஐப்பசி மாசம் இரண்டு நாட்கள் நடைபெறுகின்ற இந்த திருவிழாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பிரியாணி பிரசாதமாக வழங்கப்படுவது வழக்கம்.

இதையொட்டி கோவில் வளாகத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவில் 50 ஆடுகள் மற்றும் 100 சேவல்களை வெட்டி அதனை கொண்டு பிரியாணி தயாரிக்கப்பட்டு சுவாமிக்கு படையலிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனை தொடர்ந்து கள்ளிக்குடி அகத்தாப்பட்டி, வில்லூர், கூடக்கோவில், குராயூர் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து விழாவிற்கு வந்திருந்த சுவாமி தரிசனம் செய்து வழிபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு நேற்று மதியம் சிறப்பு விருந்தாக பிரியாணி பிரசாதம் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை கள்ளிக்குடி சூளை கருப்பசாமி கோவில் நிர்வாகத்தினர் சிறப்புடன் செய்திருந்தனர்

எடப்பாடி பழனிசாமி அறிக்கையை

# தி.மு.க. அரசு பின்பற்றி இருந்தால் காய்ச்சலால் சிறுவன் உயிரிழந்த நிலையை தடுத்திருக்கலாம்

## மாநில மருத்துவரணி இணைச்செயலாளர் டாக்டர் பா.சரவணன் குற்றச்சாட்டு



மதுரை, அக். 20-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிக்கையை தி.மு.க. அரசு பின்பற்றி இருந்தால் காய்ச்சலால் சிறுவன் உயிரிழக்கும் நிலையை தடுத்திருக்கலாம் என்று மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் கடும் குற்றச்சாட்டியுள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் நிருபர்களிடம் கூறியதாவது- தற்போது தமிழகத்தில் 2,127 சுகாதார நிலையம், நகர்ப்புற சுகாதார நிலையம் 8,714 துணை சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், வட்டம் சாராத மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரிகள் என தமிழகத்தில் 11,333 மேல் அரசு மருத்துவமனைகள் உள்ளது.

கடந்த அம்மா ஆட்சியில் காலத்தில் 31,250 மருத்துவ காலிபணியிடங்கள் நிரப்பப் பட்டது. கடந்த எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு ஆண்டில் ஒரு கோடியே 50 லட்சம் உள்நோயாளிகளும், 4 கோடி மேல் வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வந்தனர்.

ஆனால் ஸ்டாலின் திமுக ஆட்சியின் இந்த மூன்றரை ஆண்டுகளில் வெறும் 6,700 மருத்துவகாலி பணியிடங்கள் மட்டும் தான் நிரப்பப்பட்டது. ஆனால் 36,000 பணி பணி இடமாற்றம் செய்யப்பட்டது இதை கூட அமைச்சர் மா.சு. சாதனையாக சொல்கிறார். ஆனால் தொடர்ந்து மருத்துவத்துறையில் சருக்கல் தான் ஏற்பட்டு வருகிறது. அ.தி.மு.க.பொதுச் செயலாளர் எடப்பாடியார் கடந்த 4-ம் தேதி ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டு இருந்தார். அதில் தமிழகத்தில் டெங்கு, மலேரியா, ப்ளூ காய்ச்சல், சிக்கன்குனியா மற்றும் விஷ காய்ச்சல் பரவி வருகிறது.

இதன் மூலம், குழந்தைகள் முதல் முதியோர் வரை பாதிப்பு ஏற்படும். மேலும் அரசு மருத்துவமனையில் உரிய மருந்துகள் இல்லை ஒரே ஊசியை தான் பல பேருக்கு பயன்படுத்தி வருவார்கள். மேலும் கழிவுநீர் களை உடனே அப்புறப்படுத்தி, தேவையான கொசு மருந்துகள் தெளித்து, ப்ளீசிங் பவுடர் ஆகியவற்றை தூவி முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து மக்கள் உயிரை காப்பாற்ற வேண்டும் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

ஆனால் ஸ்டாலின் திமுக அரசு, எடப்பாடியார் வெளியிட்ட அறிக்கை பின்பற்றாமல் இருப்பதால் தற்போது டெங்கு காய்ச்சல் அதிகரித்து வருகிறது. இதனைத் தொடர்ந்து தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியம், குள்ளப்புரம் ஊராட்சி பகுதியை சேர்ந்த 10 வயது உள்ள மோகித் குமார் என்ற சிறுவன் கடந்த 14-ம் தேதி காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி அந்த சிறுவன் இறந்துள்ளார். அதுபோல் அதே பகுதியை சேர்ந்த 2 பேர் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்ல அது கடந்த 2023 ஆண்டு, டிசம்பரில் திருவள்ளுவர் மாவட்டம் செங்குன்றம் பகுதியில் ப்ளீச்சிங் போடு பதிலாக மைதா மாவு தூவப்பட்டது. அதேபோல் தற்போது தாம்பரம் மாநகராட்சியில் சேலையூர் ஏரி பகுதியில் அதேபோலத்தான் ப்ளீச்சிங் பவுடர் பதிலாக மைதா மாவு தூவப்பட்டுள்ளது.

இதன் மூலம் மக்கள் உயிரில், ஸ்டாலின் திமுக அரசு விளையாடுகிறது. ஆகவே தொடர்ந்து முதலமைச்சரும், துறையில் அமைச்சரும் போட்டி, அறிக்கை, அரசு செய்தி குறிப்பு ஆகியவற்றை விட்டு, விலை மதிக்க முடியாத மனித உயிர்களை காப்பாற்ற குறட்டை விட்டு தூங்குமால் அரசு நடவடிக்கை எடுக்குமா? . இவ்வாறு அவர் கூறினார்.

# பிரதீபா புரஸ்கார் விருது பெற்ற சிவகங்கை சி.பி.எஸ்.இ. பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு



சிவகங்கை, அக். 20-

ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கான ஆளுமைத்திறன்களை வளர்க்கும் விதமாக பல்வேறு திறன்வளர் பயிற்சிகளை ஜே.சி.ஐ தன்னார்வ அமைப்பானது நாடு முழுவதும் நடத்தி வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் பள்ளியில் பயிலும் மாணவர்களின் திறமை, கல்விச் செயல்பாடுகள், நன்னடத்தை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரதீபா புரஸ்கார் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2024-ம் ஆண்டிற்கான சிறந்த மாணவர்களுக்கான பிரதீபா புரஸ்கார் விருது, சிவகங்கை மௌண்ட் லிட்ரா ஜீ சீனியர் செகண்டரி பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவன் ஹரிசுதன் மற்றும் பத்தாம் வகுப்பு மாணவி. திவ்யநாயகி ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்டது.

இந்த விருதினை சிவகங்கை அமைப்பின் ஜே.சி.ஐ தலைவர் பன்னீர் செல்வம், செயலாளர் ஹரிஹர சுதன் மற்றும் பயிற்சியாளர் .சக்தியப்ரியா ஆகியோர் இவ்விருதினை மாணவர்களுக்கு வழங்கி கௌரவித்தனர். விருது பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் முதல்வர் பாலமுருகன், மாணவர் தலைவர்.காவியன், தலைவி. தான்யாஸ்ரீ மற்றும் ஜே.சி.ஐ அமைப்பின் நிர்வாகிகள் முன்னிலையில் பாராட்டு விழா நடைபெற்றது.

பள்ளித் தலைவர் டாக்டர்.பாலா. கார்த்திகேயன் உள்ளிட்ட பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் ஆகியோர்கள் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

# விபத்தில்லா தீபாவளியை கொண்டாட தமிழ்நாடு மக்கள் நுகர்வோர் பேரவை வேண்டுகோள்



ஒட்டன்சத்திரம், அக். 20-

தீபாவளி பண்டிகை வரும் 31-ம் தேதி கொண்டாடப்படுகிறது. விபத்தில்லாமல் தீபாவளி பண்டிகையை கொண்டாடுவது குறித்து தமிழ்நாடு மக்கள் நுகர்வோர் பேரவையின் திண்டுக்கல் மாவட்ட தலைவர் விஸ்வரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

குழந்தைகள் பட்டாசு வெடிக்கும் பொழுது பெரியவர்கள் அருகில் இருக்க வேண்டும். பட்டாசுகளை வீட்டிற்கு வெளியில் குடியிருப்பு அல்லாத பகுதிகளில் வைத்து வெடிக்க வேண்டும். பட்டாசு வெடிக்கும் பொழுது பாதுகாப்பு உபகரணங்களை அருகில் வைத்திருக்க வேண்டும். பட்டாசு வெடிக்கும்பொழுது எழிதில் தீப்பிடிக்கும் பொருட்களை அருகில் வைத்திருக்கக்கூடாது. பட்டாசுகளை பாட்டில்களில் வைத்து வெடிக்க கூடாது. புஸ்வாணங்களை தரைத்தளத்தில் வைத்து பக்கவாட்டில் நின்று கொழுத்த வேண்டும், தீ பொருத்திய பட்டாசுகள் வெடிக்கவில்லை என்றால், அதனை உடனடியாக கையில் எடுக்கக்கூடாது. வெடிக்காத பட்டாசுகளை மறுபடியும் வெடிக்க வைக்க முயலக்கூடாது. ஈரமான பட்டாசுகளை அடுப்பில் உழரவைக்கக்கூடாது. பள்ளிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பட்டாசுகளை வெடிக்கக்கூடாது. குறிப்பாக திறந்தவெளிகளில் பட்டாசுகளை அரசு நிர்ணயித்த காலக்கெடுவிற்குள் வெடித்து விபத்தில்லா தீபாவளியை கொண்டாட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விடப்படும் சிறப்பு ரயில்களுக்கு திருமங்கலத்தில் நிறுத்தம்

## வழங்கிடுமாறு பயணிகள், பொதுமக்கள் கோரிக்கை

திருமங்கலம், அக். 20-

தென்மாவட்ட மக்களின் வசதிக்கென இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது விடப்படும் சிறப்பு ரயில்களுக்கு மதுரை மாவட்டம் திருமங்கலம் ரயில் நிலையத்தில் நிறுத்தம் வழங்கிடுமாறு திருமங்கலம் பகுதி ரயில் பயணிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தீபாவளி பண்டிகையின் போது தென்மாவட்ட மக்களின் வசதிக்கென சென்னையிலிருந்தும் அதேபோல் மறுமார்க்கத்திலிருந்தும் சிறப்பு ரயில்கள் தெற்கு ரயில்வேயால் விடப்படுகிறது. அதிலும் குறிப்பாக சென்னையிலிருந்து தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாகர்கோவில், திருவனந்தபுரம், திருநெல்வேலி, செங்கோட்டை போன்ற முக்கிய ஊர்களுக்கு சிறப்புரயில்கள் விடப்படுவது வழக்கம். இந்த சிறப்பு ரயில்கள் மூலம் தென் மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான பயணிகள் பயனடைந்து வருகின்றனர். இருப்பினும் தீபாவளி பண்டிகையின் போது புதிய சிறப்பு ரயில்கள் குறித்த அறிவிப்புகள் தெற்கு ரயில்வேயால் வெளியிடப்பட்டு வந்தாலும் திருமங்கலம் தொகுதி மக்களுக்கு சிறப்பு ரயில்கள் இன்று வரையிலும் எட்டாக் கனியாகவே உள்ளது. தற்போது திருமங்கலம் பகுதியிலுள்ள மக்கள் சென்னை செல்லவேண்டும் என்றால் அவர்கள் முழுக்க முழுக்க நம்பியிருப்பது முத்துநகர் மற்றும் அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ரயில்கள் மட்டும் தான். இவ்விரு ரயில்களிலும் கூட்டம் அதிகமாக இருப்பதால் திருமங்கலம் பகுதி மக்கள் பெரும் சிரமத்துடனே பயணித்து வருகின்றனர்.

திருமங்கலம் தொகுதியை சேர்ந்த மக்கள் பாதுகாப்பான பயணம் மேற்கொள்ள திருமங்கலம் ரயில் நிலையத்தை பயன்படுத்தி வெளியூர்களுக்கு ரயில்கள் மூலம் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். இருப்பினும் தெற்கு ரயில்வேயால் தீபாவளி பண்டிகையின் போது அறிவிக்கப்படும் அனைத்து சிறப்பு ரயில்களும் திருமங்கலம் நகரில் நிற்காமல் செல்கின்றன. இது குறித்து ரயில்வே நிர்வாகத்திற்கு திருமங்கலம் பகுதியைச் சேர்ந்த வணிக,வர்த்தக சங்கங்கள் மற்றும் பொதுநல அமைப்புகள் பலமுறை கோரிக்கை மனுச்செய்தும் எந்தவித பயனும் ஏற்படவில்லை. சென்னைக்கு ஒரு தாம்பரம் போல மதுரைக்கு நுழைவுவாயிலாக, தென்மாவட்டங்களுக்கு பாலமாக திகழும் திருமங்கலம் நகரை சிறப்பு ரயில்கள் புறக்கணித்துச் செல்வது வேதனையான விஷயம் என இப்பகுதி பொதுமக்கள் குமுறுகின்றனர்.

எனவே இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது விடப்படும் சிறப்பு ரயில்கள் திருமங்கலம் நகரில் நின்று சென்றிட ரயில்வே நிர்வாகம் உத்தரவிட வேண்டும் என்பதே திருமங்கலம் தொகுதி மக்கள் மற்றும் ரயில் பயணிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# மேலாய்குடி கிராமத்தில் மருத்துவ முகாம்: முருகேசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



பரமக்குடி, அக். 20-

பரமக்குடி அருகே உள்ள மேலாய்குடி கிராமத்தில் வரும் முன் காப்போம் மருத்துவ முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி கிழக்கு ஒன்றியம், மேலாய்குடி ஊராட்சி கிழக்கு டிவிஷப்பு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இந் நிகழ்ச்சியில் பரமக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், மேலாய்குடி ஊராட்சி மன்ற தலைவர் காளிமுத்து, பார்த்திபனூர் வட்டார மருத்துவ அலுவலர் சுகந்தி போஸ், வெங்கிட்டன் குறிச்சி மருத்துவ அலுவலர் பிரதீபா மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் ஆண்டிஅம்பலம் இல்லத் திருமண விழா: துணை முதல்வர் தலைமையில் நாளை நடக்கிறது

நத்தம், அக். 20-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டிஅம்பலம் இல்லத் திருமணவிழா நாளை 21-ம் தேதி திங்கட்கிழமை காலை 9.15 மணியில் இருந்து 10.15 மணிக்குள் மதுரை சாலையில் விளாம்பட்டி விலக்கில் உள்ள திருமண அரங்கில் நடைபெறுகிறது. இதில் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைக்கிறார். மேலும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவு மற்றும் உணவு வழங்கல்துறை அமைச்சர் சக்கரபாணி உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சத்திரக்குடி வட்டாரத்தில் வேளாண்துறை திட்ட பணிகளை கூடுதல் வேளாண் இயக்குநர் ஆய்வு



பரமக்குடி, அக். 20-

சத்திரக்குடி வட்டாரத்தில் 2024- 25 ஆம் ஆண்டிற்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் செய்யாலூர், சேமனூர், செவ்வூர், காமன்கோட்டை மற்றும் பொட்டிதட்டி ஆகிய ஐந்து கிராம பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கலைஞர் திட்டத்தில் தேர்வான கிராம பஞ்சாயத்தில் காட்டு கருவேல் மற்றும் புதர் செடிகள் நிறைந்த தரிசு நிலங்கள் உள்ள விவசாயிகளை தேர்வு செய்து காட்டு கருவேல் மற்றும் புதர் செடிகளை சுத்தம் செய்து சாகுபடிக்கு கொண்டுவரும் 2.5 ஏக்கர் நிலத்திற்கு பின்னேற்பு மானியமாக ரூ.9600 விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படும். சேமனூர் கிராமத்தைச் சேர்ந்த மாரீஸ்வரி க/பெ சண்முகம் 2.5 ஏக்கர் நிலத்தில் கலைஞர் திட்டத்தில் காட்டு கருவேல் சுத்தம் செய்து நெல் சாகுபடி செய்ததை கூடுதல் வேளாண் இயக்குநர் கண்ணையா ஆய்வு செய்து நெல் பயிருக்கு நெல் நுண்ணூட்டச்சத்து இட்டு தழைச்சத்து உரத்தினை அளவாக மூன்று தடவை பிரித்து வயலில் இடும்படி ஆலோசனை வழங்கினார்.

மேலும் முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் காக்கனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த முருகவேல், போகலூரை சேர்ந்த அழகு சுப்பிரமணியன் மற்றும் மென்னந்தி கிராமத்தை சேர்ந்த பஞ்சவர்ணம் ஆகிய விவசாயிகளுக்கு வரப்புகளில் வேம்பு மரக்கன்றுகள் நடுவதற்கு தலா ஒவ்வொரு விவசாயிக்கும் 50 எண்கள் மரக்கன்றுகள் வழங்கினார். சத்திரக்குடி வேளாண்மை விரிவாக்கம் மைய இடுபொருள்கள் இருப்பு விவரம், மின்னணு முறையில் வேளாண் இடுபொருள்கள் பட்டியலிடுதல் போன்றவற்றையும் கூடுதல் வேளாண்மை இயக்குநர் கண்ணையா ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் பொழுது வேளாண்மை இணை இயக்குநர் முருகேசன், வேளாண்மை துணை இயக்குநர் (ம.தி) பாஸ்கர மணியன், வேளாண்மை துணை இயக்குநர் (மா.தி) அமர்லால், வேளாண்மை உதவி இயக்குநர் தரக்கட்டுப்பாடு நாகராஜன், சத்திரக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் இராஜேந்திரன், துணை வேளாண்மை அலுவலர் வித்யாசாகர், உதவி வேளாண்மை அலுவலர் ஜெயசங்கர், கௌசல்யா, பரிமளா மற்றும் வாசமலர் உடன் இருந்தனர்.

# விவசாயம் தொடர்பான கோரிக்க மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்

## குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நீலகிரி கலெக்டர் உறுதி



ஊட்டி, அக்.20-

விவசாயம் தொடர்பான கோரிக்கைகள்; விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பேசினார்.

நீலகிரி மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் (18.10.2024) நடைபெற்றது. மேலும், விவசாய சங்கங்களிடமிருந்து முன்னதாகவே பெறப்பட்ட 39 கோரிக்கை மனுக்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்; அந்த மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பதில்களாக விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது :-

நீலகிரி மாவட்டம், கூடலூர் உழவர் சந்தையில் அமைந்துள்ள சோலார் குளிர் பதன கிடங்கினை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளலாம் எனவும், ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை அன்று வனத்துறையின் சார்பில் குறைதீர் கூட்டம் ஊட்டி மற்றும் கூடலூர் வனத்துறை அலுவலகத்தில் காலை 11.00 மணி அளவில் நடைபெறும். மேலும் ஆவின் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் நீலகிரி மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்கு தேவைப்படும் தீவன புல் குறித்து கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தீவன புல் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், விவசாயம் தொடர்பான கோரிக்கைகள்; விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். பின்னர், இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் எழுதிய 'தென்னை சாகுபடி விவசாயிகளுக்கான' கையேட்டினை விவசாயிகளுக்கு கலெக்டர் வழங்கினார். இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர் (கூடலூர்) வெங்கடேஷ் பிரபு, தோட்டக்கலை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், விவசாயிகள் உட்பட அரசுத் துறை அலுவலர்கள், பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நவம்பர் 28ம் தேதி நடைபெற உள்ளது: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்



**சென்னை,அக்.20**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு (19.10.2024) சென்னை, பாரிமுனை, அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயிலில் புதிய வெள்ளி திருத்தேர் திருப்பணிகளை ஆய்வு செய்தார்.அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

**கும்பாபிஷேகம்**

2021 ஆம் ஆண்டு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒட்டு மொத்த தமிழகத்தில் இருக்கின்ற மரத்தேர்கள், வெள்ளித் தேர்கள், தங்கத்தேர்கள் பக்தர்களின் நேர்த்திக் கடனுக்கு பயன்படாமல் இருந்தவற்றை நேர்த்திக்கடனுக்கு கொண்டு வருவதும், புதிதாக மரத்தேர், தங்கத்தேர், வெள்ளித்தேர் வேண்டுமென்ற பக்தர்களின் கோரிக்கைக்கு ஏற்ப பல்வேறு புதிய அறிவிப்புகளை முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில் அறிவிக்கப்பட்டு அந்த பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடந்து வருகின்றன. அதன்படி இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சுமார் 59 கோடி ரூபாய் மதிப்பில் 97 புதிய மரதேர்கள் செய்கின்ற பணி நடந்து வருகின்றன. பழுதடைந்த மரதேர்கள் சுமார் 11.89 கோடி ரூபாய் செலவில் 53 மரத்தேர்கள் மராமத்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

வெயில், மழை போன்றவற்றால் தேர்கள் சேதாரம் இல்லாமல் இருப்பதற்கு சுமார் 28 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் 172 திருத்தேர்களுக்கு கொட்டகை அமைக்கின்ற பணி கொட்டகை அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 29 கோடி ரூபாய் செலவில் 5 புதிய தங்கத் தேர்களும், 27 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் 9 புதிய வெள்ளித் தேர்களும் செய்வதற்கு அறிவித்திருந்தோம். அதில் அருள்மிகு பெரியபாளையம் தங்கத் தேர் மற்றும் திருத்தணி வெள்ளித்தேர் முடிவுற்று பக்தர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது.

திருக்குளங்கள், புதிய திருமண மண்டபங்கள், அன்னதான கூடங்கள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், அர்ச்சகர் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு, பெருந்திட்ட வரைவு என்றாலும் சரி இந்த ஆட்சியில் இந்த துறையைச் சார்ந்த அனைத்து பகுதிகளையும் ஒன்று விடாமல் ஆய்வுகள் நடத்தி அனைத்தையும் மேம்படுத்துகின்ற ஒரு மகத்தான பணியை இந்த திராவிட மாடல் ஆட்சி ஏற்படுத்திருக்கின்றது. சுமார் 19 திருக்கோயில்கள் மட்டும் 1,530 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வரைவின் கீழ் திருப்பணிகள் நடந்து வருகின்றன. அதில் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலில் 160 கோடி ரூபாய் செலவிலும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சுமார் 300 கோடி ரூபாய் செலவிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. முதல்வர் அடிக்கல் நாட்டிய பிறகு அந்த பெருந்திட்ட வரைவிலே எடுத்துக் கொள்ளப்பட்ட முடி காணிக்கை மண்டபம், அன்னதான கூடம், சுகாதார வளாகம், நீரேற்று நிலையம் ஆகிய பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 14ஆம் தேதி துவக்கி வைத்தார்கள்.

இந்த வகையில் எடுத்துக்கொண்ட பணிகளில் அனைத்தையும் நேர்த்தியோடு நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து இது போன்ற ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றோம். அறிவிக்கப்பட்ட ஒன்பது வெள்ளித்திருத்தேர்களில் அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயிலின் திருத்தேர் பணிகள் மரத்தேர் பணி முடிவுற்று இன்றைக்கு சுமார் 2 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் வெள்ளித் தகடு பதிக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்பணிகள் திருக்கோயிலில் இருந்த 100 கிலோ வெள்ளி பயன்படுத்திக்கப்படு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. திருக்கோயிலைச் சேர்ந்த காளிதாஸ் சுவாமி அவர்கள் 120 கிலோ அளவிற்கு பல்வேறு நன்கொடையாளர் வாயிலாக இந்த திருத்தேருக்கு வெள்ளியை உபயமாக பெற்று தந்துள்ளார். இந்த வெள்ளித்தேர் 2025 மார்ச் 1 அன்று பக்தர்களின் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருக்கோயில்களை பொறுத்தவரை மாண்பமை உயர்நீதிமன்றம் கட்டிக்காட்டுகின்ற அனைத்து பணிகளையும் விரிவுபடுத்தி அவற்றை நேர்த்தியுடன் கொடை நிதிபதிகளின் பாராட்டை பெறுகின்ற துறையாக இந்து சமய அறநிலையத்துறை இருக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சி காலத்தில் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு ஒரு லட்சம் தலமரக்கன்றுகளை நடுகின்ற பணியை துவக்கினோம் தமிழ்நாடு முழுவதும் ஒரு லட்சம் தல மரக்கன்றுகளை நட்டு நிறைவு செய்திருக்கிறோம். மேலும், சமூக ஆர்வலர்கள் மரக்கன்றுகள் நடுகின்ற பணிக்கு விண்ணப்பிக்கின்ற போதும் அதற்கும் உண்டான அனுமதியை தருகின்றோம். அந்த வகையில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் சுமார் 2 லட்சம் மரங்களை திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் தன்னார்வலர்கள் வாயிலாக நடுவதற்கு அனுமதி தந்து அந்தப் பணியும் நிறைவுற்று இருக்கின்றது.

கள்ளழகர் கோயிலில் சுமார் 25 லட்ச ரூபாய் செலவில் நந்தவனம் அமைக்கப்பட்டு அந்த நந்தவனத்தில் பூக்கின்ற பூக்கள் தெய்வத்திற்கு உண்டான தினந்தோறும் வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திற்கு சுமார் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்தார்கள். இந்த ஆண்டு சுமார் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகை தருவார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் கடந்த ஆண்டு செய்த ஏற்பாடுகளை போல் கூடுதலாக 30 லிருந்து 40% ஏற்பாடுகளை செய்திட திட்டமிட்டு இருக்கின்றோம். துணை முதலமைச்சர் அவர்களும், மாவட்ட அமைச்சர்எ.வா.வேலு அவர்களும் இணைந்து கிரிவலப் பாதையை ஆய்வு செய்தோம். அதில் பெருந்திட்ட வரைவின் கீழ் ரூபாய் 36 கோடி செலவில் வெகுவிரைவில் இந்த மாத இறுதிக்குள்ளாக முதல்வர் அந்த பணியை துவக்கிட உள்ளார்கள்.

கிரிவலப் பாதையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்ட அமைச்சர் அவர்கள் இரண்டு இடங்களில் சுகாதார வளாகங்களும், அதே போல் மூன்று இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற நிலையங்களையும் அமைக்கின்ற பணியிலே ஈடுபட்டு இருக்கின்றார். மேலும், அதேபோல் சுகாதார வளாகங்கள் தனியார் பங்களிப்புடன் மூன்று இடங்களில் கட்டப்பட்டு வருகின்றது. கார்த்திகை தீபத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு இப்பணிகளை ஆய்வு செய்ய உள்ளோம்.

கடந்த முறையை போல் இந்த ஆண்டும் கடந்த எவ்வித சிறு அசம்பாவிதமும் இல்லாமல் சிறப்பாக இந்த தீபத் திருவிழா நடத்துவதற்கு முன்னேற்பாடுகள் மற்றும் ஆலோசனைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். மேலும், பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் உணவு, தங்கும் வசதிகள், துப்புரவு பணிகள், மருத்துவ வசதி போன்ற அனைத்தும் சிறப்பான வகையில் செய்து தரப்படும்.

.புரசைவாக்கம், அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்திட திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு நவம்பர் மாதம் 28- ஆம் தேதி குடமுழுக்கு நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, இணை ஆணையர் கி.ரேணுகாதேவி, ஆர். வான்மதி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இ.எம்.எஸ். மோகன், திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் இரா. ஹரிஹரன், உதவி ஆணையர் சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இ-காமர்ஸ் மூலம் ஸ்டார்ட் அப்களை மேம்படுத்த ஸ்டார்ட்அப் இந்தியா, டிபிஐஐடி உடன் அமேசான் இந்தியா கூட்டாண்மை

கோவை, அக்.20

அமேசான் இந்தியா நிறுவனமானது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் கீழ் உள்ள ஸ்டார்ட்அப் இந்தியாவுடான கூட்டாண்மையின் மூலம் இ-காமர்ஸ் தளங்களில் வணிகங்களை உருவாக்க மற்றும் வளர்க்க ஸ்டார்ட்அப்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது. அமேசான் ஆனது ஸ்டார்ட்அப் இந்தியாவுடன் இணைந்து, தகுதியான ஸ்டார்ட்அப்களை இணையவழியில் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள உதவும். அதுவும், ஸ்டார்ட்அப் இந்தியா போர்ட்டலில் பிரத்யேக பக்கம் மூலம் அமேசான் இந்தியாவின் சந்தையில் பதிவு செய்வதன் மூலம் இது சாத்தியமாகும். அமேசான் பே, அமேசான் இன்சென்டிவ்ஸ், அமேசான் பிசினஸ், அமேசான் ட்ரான்ஸ்போர்ட், ஏடபிள்யூஎஸ், அமேசான் அட்வெர்டைசிங் மற்றும் மினி டிவி போன்ற அமேசானின் விரிவான சேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பெண்கள் ஸ்டார்ட்அப்களுக்குக் கிடைக்கும். இது பேஷன், எப்பி, ஜவுளி மற்றும் ஆடைகள், பொம்மைகள் மற்றும் விளையாட்டுகள், ஆட்டோமோட்டிவ், கலை மற்றும் புகைப்படம் எடுத்தல், செல்லப்பிராணிகள் மற்றும் விலங்குகள், விவசாயம் மற்றும் பல உள்ளிட்ட தொடர்புடைய தொழில்களின் பரந்த தேர்வை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கூடுதலாக, ஸ்டார்ட்அப் இந்தியா திட்டத்தின் கீழ், பாரத் ஸ்டார்ட்அப் நாலெட்ஜ் அக்சஸ் ரெஜிஸ்ட்ரி முயற்சியைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஸ்டார்ட்அப் இந்தியாவுடன் அமேசான் கூட்டு சேரும். அமேசான் இந்தியாவின் பப்ளிக் பாலிசி துறையின் துணைத் தலைவர் சேத்தன் கிருஷ்ணசாமி பேசுகையில், "இந்தியாவில் உள்ள ஸ்டார்ட்அப்கள், பல்வேறு தொழில்களில் வெற்றிகரமான வணிகங்களை உருவாக்குவதற்கான அவர்களின் முழுமையான நம்பிக்கை மற்றும் மன உறுதியின் காரணமாக அனைவருக்கும் ஒரு உத்வேகமாக உள்ளன. இ-காமர்ஸின் சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம், புதிய உயரங்களை எட்டுவார்கள். மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் புதுமையான தயாரிப்புகளுடன் சேவை செய்கிறார்கள். தொழில்முனைவோரை மேம்படுத்துதல் மற்றும் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியை உந்துதல் ஆகிய எங்களின் பொதுவான இலக்கைத் தொடர ஸ்டார்ட்அப் இந்தியா, டிபிஐஐடியுடன் கைகோர்ப்பதை பெருமையாக கருதுகிறோம்என்றார்.

# கூடலூர் வட்டார அளவிலான பள்ளி பொறுப்பாசிரியர்களுக்கு புத்தாக்க பயிற்சி



ஊட்டி, அக்.20-

கூடலூர் வட்டார அளவிலான பள்ளிகளில் குடிமக்கள் என்ற பொறுப்பாசிரியர்களுக்கு ஒருநாள் புத்தாக்க பயிற்சி வழங்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், நீலகிரி மாவட்ட கல்வித்துறை, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை ஆகியன சார்பில் பந்தலூர் டியூஸ் பள்ளி கூட்டரங்கில் கூடலூர் வட்டார அளவிலான நுகர்வோர் மன்ற பொறுப்பு ஆசிரியர்களுக்கு ஒரு நாள் நுகர்வோர் விழிப்புணர்வு புத்தாக்க பயிற்சி வழங்கப்பட்டது.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். நுகர்வோர் பாதுகாப்பு மைய ஆலோசகர் சுந்தரலிங்கம், மைய நிர்வாகி மகேந்திரபூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வட்டார மருத்துவ அலுவலர் கதிரவன் பயிற்சியை துவக்கி வைத்து பேசினார்.

டியூஸ் முதல்வர் சுதிந்திரநாத் முன்னிலை வகித்து பேசும்போது மாணவர்கள் இடையே நுகர்வோர் சார்ந்த கல்வியை எடுத்து செல்வது அனைத்து குடிமக்கள் நுகர்வோர் மன்ற பொறுப்பு ஆசிரியர்கள் பங்களிப்பு அவசியம். மாணவர்கள் பொருட்கள் பற்றிய அறிவை பெற ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மைய பொது செயலாளர் ரமேஷ் பேசும்போது நுகர்வோர்கள் நமது அறிவை மேம்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு தினங்கள் அனுசரிக்கபடுகிறது அவற்றை குறித்து அறிந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

தமிழ்நாடு நுகர்வோர் அமைப்புகளின் பயிற்சி இயக்குனர் சரவணன் பேசும்போது நுகர்வோர் குறித்த விழிப்புணர்வை அதிகம் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது என்றார். இந்திய நுகர்வோர் சம்மேளனத்தின் தேசிய செயலாளர் திருநாவுக்கரசு பேசும்போது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற முடியும் என்றார்.

தொடர்ந்து நுகர்வோர் மன்றங்களின் வருங்கால செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் 60க்கும் மேற்பட்ட குடிமக்கள் என்ற பொறுப்பாசிரியர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நுகர்வோர் மைய நிர்வாகிகள் மகேந்திர பூபதி, பிரேம்குமார் இந்திரஜித் உள்ளிட்ட பலர் செய்து இருந்தனர்.

# பள்ளிப்பட்டு ஒன்றியம் கீச்சலம் பள்ளியில் கலையரங்கம்: எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்



**திருத்தணி அக் 20.**

பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் அடங்கிய கீச்சலம் ஊராட்சியில் நாபார்டு திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ரூ. 18 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்ட அடிக்கல் நாட்டி பணியை எஸ். சந்திரன். எம்.எல். ஏ. துவக்கி வைத்தார்.

மேலும் அரசு மேல்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மூலம் 20 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார்.

ஜங்காலப்பள்ளி ஊராட்சியில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டிய எம். எல். ஏ. தொடர்ந்து கீளப்பூடி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 11.77 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய ரேஷன் கடையை ரிப்பன்வெட்டிதிறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பள்ளிப்பட்டு திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் ஜி. ரவீந்திரா. ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் பொன்.சு. பாரதி.வட்டார வளர்ச்சி அலுவலர் மெல்கி ராஜா சிங். பொதுப்பணித்துறை உபகோட்ட (கட்டிடம்) திருத்தணி உதவி செயற்பொறியாளர் முரளி. பள்ளிப்பட்டு ஒன்றிய பொறியாளர் சாவித்திரிமற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# துரைப்பாக்கத்தில் சேற்றில் மோட்டார் சைக்கிளுடன் சிக்கிய வாலிபர்: தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்

**சென்னை அக் 20-**

சென்னையை அடுத்த சோழிங்கநல்லூர் பகுதியை சேர்ந்தவர் பவுன்ராஜ் (வயது 25). இவர் தனியார் நிறுவனத்தில் உணவு டெலிவரி செய்யும் வேலை செய்து வருகிறார். கடந்த வியாழகிழமை அன்று இரவு சுமார் 11.20 மணியளவில் துரைப்பாக்கம் வி.ஜி.பி. அவென்யூவில் உள்ள ஒரு வீட்டுக்கு உணவு டெலிவரி செய்வதற்காக மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்.உணவு டெலிவரி செய்யும் இடத்திற்கு செல்ல செல்போனில் "கூகுல் மேப்" பார்த்தபடி சென்றார். இருள் சூழ்ந்திருந்த பகுதியை மேப் காட்டியதால் கண்மூடித்தனமாக சென்ற பவுன்ராஜ் அங்குள்ள சதுப்பு நில சேற்றில் மோட்டார் சைக்கிளுடன் சிக்கி கொண்டார்.சேற்றில் சிக்கிய பவுன்ராஜ் அதிலிருந்து மீள முடியாததால் கூச்சலிட்டார். அக்கம்பக்கத்தில் யாரும் இல்லாததால் பரிதவித்த அவர் 112 என்ற கட்டுப்பட்டு அறைக்கு செல்போனில் தொடர்பு கொண்டு உதவி கேட்டார். பின்னர் பவுன்ராஜ் செல்போன் எண்ணிற்கு அருகில் உள்ள துரைப்பாக்கம் தீயணைப்பு வீரர்கள் தொடர்பு கொண்டு எந்த பகுதியில் உள்ளீர்கள் என்று கேட்டனர்.

பவுன்ராஜ் அவரது செல்போனில் இருந்து இருப்பிட லொக்கேஷன் அனுப்பினார். உடனே துரைப்பாக்கம் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்று சேற்றில் சிக்கிக் கொண்டிருந்த வாலிபரையும் மோட்டார் சைக்கிளையும் மீட்டனர்.

காப்பாற்ற யாரும் வராத நிலையில் மிகவும் அச்சத்தில் இருந்த நேரத்தில் விரைந்து வந்து மீட்ட தீயணைப்பு வீரர்களுக்கு கண்ணீர் மல்க பவுன்ராஜ் நன்றியை தெரிவித்தார். பின்னர் வாலிபருக்கு தண்ணீர் கொடுத்து சிறிது நேரம் இளைப்பாற வைத்து வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# வாலிபர் அடித்து கொலை

**சென்னை அக் 20-**

அயனாவரம் குன்னூர் நெடுஞ்சாலை சவுத் காலனி சந்திப்பு அருகே நேற்று முன்தினம் ஒரு வாலிபர் நடந்து சென்றபோது, மர்ம நபர்கள் பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். பணம் தராததால், சரமாரியாக தாக்கிவிட்டு தப்பினர்.

தகவலறிந்த ஐ.சி.எப் போலீசார் வாலிபரை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருததுவ மனைக்கு அனுப்பினர்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று அவர் இறந்தார். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து, கொலையான வாலிபர் யார், அவரை அடித்து கொன்றவர்கள் யார் என விசாரணை நடத்துகின்றனர்.

# இசுஸு டி- மேக்ஸ் ஆம்புலன்ஸ் வாகனம் இசுஸு மோட்டார்ஸ் இந்தியா அறிமுகம்

**கோவை, அக்.20-**

ஏஜஎஸ் -125 டைப் சி தரக் குறியீடுகளுக்கு இணங்க முழுமையாக கட்டமைக்கப்பட்ட இசுஸு டி- மேக்ஸ் ஆம்புலன்ஸ் வாகனம் அறிமுகப்படுத்தபடுவதை அறிவிப்பதில் இசுஸு மோட்டார்ஸ் இந்தியா பெருமிதம் கொள்கிறது. இந்த முன்னோடி ஆம்புலன்ஸ் நோயாளிகளை கொண்டு செல்வதில் ஈடு இணையற்ற நம்பகத்தன்மை, பாதுகாப்பு மற்றும் வசதிகளை வழங்கி அவசர மருத்துவ சிகிச்சை சேவைகளில் ஒரு புதிய வரையறையை நிர்ணயிக்கும் அதே நேரத்தில், எதிர்வினையாற்றுவதில் அதிவிரைவாக செயல்படுவதை உறுதி செய்ய முழு ஆற்றல் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இசுஸு வின் நிரூபிக்கப்பட்ட தொழில் நுட்பத்திறன் மற்றும் ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குனர்களின் தேவை குறித்த ஆழமான புரிதல் ஆகியவற்றுடன் இந்தியாவுக்கேன்றே வடிவமைக்கப்பட்டஇந்தப் புதிய இசுஸு டி-மேக்ஸ் ஆம்புலன்ஸ் இந்தப் பிரிவிலேயே மிகச் சிறந்த 14 சிறப்பம்சங்களுடன் நாட்டின் " பேசிக் லைஃப் சப்போர்ட்' ஆம்புலன்ஸ்களின் புதிய ஒரு சகாப்தத்தை துவங்கி வைத்திருக்கிறது. ".இந்த அறிமுகம் குறித்து கருத்துத் தெரிவித்த இசுஸு மோட்டார்ஸ் இந்தியா டெபுடி மேனேஜிங் டைரக்டர்.டோருகிஷிமோடோ கூறினார்,"இந்தப் பிரிவிலேயே மிகச் சிறந்த 14 சிறப்பம்சங்களுடன் இந்திய சந்தைக்காக வடிவமைக்கப்பட் டஎங்களின்த னித்துவம் வாய்ந்த தயாரிப்பான இசுஸு டி-மேக்ஸ் ஆம்புலன்ஸ் வாகனத்தை வழங்குவதில் நாங்கள் மிகவும் உற்சாகம் அடைந்துள்ளோம். புதிய இசுஸு டி- மேக்ஸ் ஆம்புலன்ஸ், ஏஜஎஸ் --125 டைப் சி ஆம்புலன்ஸின் கீழ் வரையறுக்கப்பட்ட தரக்குறியீடுகளுக்கு இணங்க, உயர்தர கட்டமைப்பு மற்றும் ஈடு இணையில்லாத வலிமையை வழங்கி இந்த மதிப்பீடுகளை முன்னெடுத்துச் செல்கிறது.. எங்களது' இசுஸு டி- மேக்ஸ் ஆம்புலன்ஸ்', 'பேசிக் லைஃப் சப்போர்ட்' ஆம்புலன்ஸ் பிரிவில் ஒரு புதிய பெஞ்ச் மார்க்கை நிறுவும் என்று நாங்கள் உறுதியாக நபுகிறோம்". ஒரு வலிமை மிக்க இசுஸு ஐ கிரிப் தளத்தின் மேல் கட்டமைக்கப்பட்ட டி- மேக்ஸ் ஆம்புலன்ஸ் வாகனம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சாலைகளின் இருவேறு நிலைகளுக்கும் உகந்ததாக வலிமையோடும் நிலைத்தன்மை கொண்டதாகவும் இருக்கச் செய்கிறது.

**ENROLLMENT NOTICE**

After ten days of the Publication of this Notice and Within Three months there after I, PREM KUMAR K, S/O R.KRISHNAMOORTHI, aged about 33 years Permanently Residing at D.NO 4/1 WORK MEN LINE, CF ESTATE, ARUVANKADU, THE Nilgiri s 643202. Intend having My enrolment as an advocate moved before the Bar Council Buildings, High court campus, Chennai -104. Those Who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

PREMKUMAR K.

கூக்கல்தொரை கிராமத்தில்

# உயிலட்டி நீர்வீழ்ச்சி பகுதியில் தடுப்பணை அமைக்க சாத்திய கூறுகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு



**ஊட்டி, அக்.20-**

நீலகிரி மாவட்டம், ஊட்டி ஊராட்சி ஒன்றியம், கூக்கல் ஊராட்சி கூக்கல் தொரை கிராமத்தில் உள்ள உயிலட்டி நீர்வீழ்ச்சி பகுதியில் தடுப்பணை அமைக்க சத்திய கூறுகள் உள்ளனவா என்பது குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று *(19-10-2024)* நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், கோடை காலத்தில் கூக்கல் மற்றும் கக்குச்சி ஆகிய ஊராட்சிகளில் குடிநீர் பற்றாக்குறையினை போக்க புதிய கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ஏதுவாக நீர் ஆதாரம் தேர்வு, இயல்பு நீரின் தரம் மற்றும் நீர் ஆதாரத்தின் நம்பகத்தன்மை ஆகியவற்றிற்கான தகுந்த ஆய்வுகள் மேற்கொண்டு திட்ட மதிப்பீடு தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.ஆய்வின் போது கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌஷிக், வேளாண்மை பொறியில்துறை செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், ஊட்டி ஊராட்சி ஒன்றிய தலைவர் மாதன் (எ) மாயன், உதவிபொறியாளர்கள் சங்கீதா (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்), குமார் (சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம்), ஊட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அண்ணாதுரை, சலீம், கூக்கல் ஊராட்சி தலைவர் பழனிச்சாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் காமராஜ், தருமன், ஊராட்சி செயலர் சுப்ரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.என்.பாலசுப்ரமணியம் மறைவிற்கு தமாகா தலைவர் ஜி.கே.வாசன்,தணைதலைவர்முன்னாள்சட்டமன்றஉறுப்பினர்விடியல்சேகர்பொதுசெயலர் யுவராஜ் மாவட்டதலைவர் பி.விஜயகுமார் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.**



**கோவை மேற்கு மண்டல காவல்துறை தலைவர் செந்தில் குமார் மற்றும் நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா ஆகியோர் நேற்று மசினகுடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கக்கனல்லா முதல் தெப்பக்காடு வரை நக்சல் தடுப்பு, வேட்டை அலுவலக நக்சல் தடுப்பு பிரிவினருடன் இணைந்து சோதனை நடத்தினர். தொடர்ந்து நக்சல் தடுப்பு பிரிவினர்களுக்கு தேவையான உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்கினர். அப்போது கூடலூர் காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தகுமார் உடன் இருந்தார்.**

ஊட்டி, நொண்டிமேடு பகுதியில்

# அ.தி.மு.க. 53-வது ஆண்டு விழா: மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் இனிப்பு வழங்கினார்



ஊட்டி, அக்.20-

ஊட்டி, நொண்டிமேடு பகுதியில் அ.தி.மு.க. 53-வது ஆண்டு விழா மாவட்ட செயலாளர் கப்பச்சி டி வினோத் தலைமையில் கழக கொடி ஏற்றி, பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஆரம்பிக்கப்பட்டு 52 ஆண்டுகள் முடிவடைந்து 53-வது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு நீலகிரி மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் கழக கொடி ஏற்றி, இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்த நிலையில் ஊட்டி நகராட்சிக்குட்பட்ட 32-வது வார்டு நொண்டி மேடு பகுதியில் அந்த வார்டின் கிளைக்கழக செயலாளரும், அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் நகர செயலாளருமான கார்த்திக் ஏற்பாட்டில் நடைபெற்ற சிறப்புமிகு விழாவில் மாவட்ட கழக செயலாளர் கப்பச்சி டி வினோத் தலைமை தாங்கி கழக கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார். அமைப்பு செயலாளர் கே.ஆர். அர்ஜூணன், நகர செயலாளர் சண்முகம் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் நகர எம்.ஜி.ஆர்.மன்ற தலைவர் ஜெயராமன், பேரவை நகர செயலாளர் திவாகர், இளைஞர்அணி மாவட்ட துணை செயலாளர் ராஜேஷ், நகர துணை செயலாளர் சிக்கந்தர் பாஷா, கிளை அவைத்தலைவர் தனசெழியன், பொருளாளர் நந்தகுமார், ஆட்டோ மூர்த்தி, கேத்தி ராஜூ, தாம்பட்டி சிவக்குமார், வினோத், ஆனந்த் மற்றும் மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் நடத்திய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணை

## அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்



ஈரோடு,அக்.20-

ஈரோடு மாவட்டம், திண்டல் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், ஈரோடு மாவட்ட நிருவாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மேலும் இத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நாள் தோறும் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, அத்திட்டங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்தில் பெரிதும் அன்பும் அக்கறையும் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் , அரசு பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம், மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண் திட்டம் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். புதுமைப்பெண் திட்டம் மூலமாக உயர்கல்வி பயிலும் மாணவியர்கள் சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், மாணவியர்களை போன்று மாணவர்களும் பயன்பெறும் வகையில் தமிழ்புதல்வன் திட்டத்தினையும் செயல்படுத்தி வருவதுடன், படித்து முடித்த மாணவ, மாணவியர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையிலும், அவர்களின் திறன் மேம்படும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் , அமெரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தமிழ்நாட்டில் 50,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்;ப்பு ஏற்படும் வகையில், பல ஆயிரம் கோடி தொழில் முதலீடு ஈர்த்து வந்துள்ளார்.

அதே போன்று, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும்; சென்று, அங்கு பொதுமக்களுக்கு தேவையான திட்டங்கள் மற்றும் தேவைப்படும் நலத்திட்டங்கள் குறித்தும், வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், விளையாட்டுத்துறையில் பிற மாநிலங்கள் பின்பற்றுகின்ற வகையில், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் ஒரு மைதானம் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். கடந்த முறை ஈரோடு மாவட்டம் வருகை புரிந்த போது சோலார் பேருந்து நிலையத்தினை பார்வையிட்டு, இந்த இடத்தில் மைதானம் அமைக்க வாய்ப்புள்ளதா என்பது குறித்து கேட்டறிந்தார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கேட்டறிந்து இங்கு வாய்ப்பு உள்ளது என்பது குறித்து தெரிவித்து, சோலார் பேருந்து நிலையம் அருகே ஒரு மிகப்பெரிய விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டத்தினையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும், இன்றைய தினம், ஈரோடு மாவட்ட நிருவாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமானது காலை 8.00 மணிக்கு துவங்கி மாலை 4.00 மணி வரை தொடர்ந்து நடைபெறும். இம்முகாமில் சுமார் 187-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று தங்கள் நிறுவனத்திற்கு தேவையான 10,000 க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்பும் வகையில் தேர்வு நடத்தி வருகிறார்கள். இன்றைய தினம் நடைபெற்று வரும் வேலைவாய்ப்பு முகாமில் 3400-க்கும் மேற்பட்ட பட்ட இளைஞர்கள், பெண்கள் கலந்து கொண்டு 120-க்கும் மேற்பட்டோருக்கு தற்போது பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமானது 2021 நவம்பர் மாதம் முதல் தொடங்கப்பட்டு தற்போது வரை 13 முகாம்கள் நடைபெற்றுள்ளது. இதுவரை இம்முகாம்களில் கலந்து கொண்டு 7800 நபர்களுக்கு மேல் வேலைவாயப்பு பெற்றுள்ளனார். அது மட்டுமில்லாமல் இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் அரசு வேலை பெற விரும்பும் இளைஞர்களுக்கு நல்ல பயிற்சியும், அனுபவமும் தருகின்ற வகையில் அமைந்துள்ளது. எனவே, படித்து முடித்த இளைஞர்கள் இது போன்று அரசு ஏற்படுத்தி வரும் வேலைவாய்ப்பு முகாம்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு வேலைவாயப்பு பெற்று, தங்கள் வாழ்க்கை தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந் நி கழ் வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி உதவி இயக்குநர் (மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம்) ரா.ராதிகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ) டி.டி.சாந்தி, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் கா.து.கவிதா, ஈரோடு மாநகராட்சி 3-ம் மண்டல குழுத்தலைவர் சசிகுமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், வேலைநாடுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி



**ஈரோடு அக் 20-**

கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் போதைப்பொருள் தடுப்புக் குழு அமைப்பு மற்றும், கணினி தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறையின் ஒருமைப்பாடு மன்றம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம் தேசிய மாணவர் படை நாட்டு நலப் பணித் திட்டம் செஞ்சுருள் சங்கம் ஆகியவை இணைந்து போதை ஒழிப்பு . விழிப்புணர்வு மனிதச் சங்கிலி ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் நடைபெற்றது.

இதில் ஈரோடு தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் எஸ்.ஆர் ரமேஷ் கலந்துகொண்டு மனிதச் சங்கிலியைத் தொடங்கி வைத்தார். கணினி தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மாணவர்கள் போதை ஒழிப்பு குறித்த பதாகைகளை கைகளில் ஏந்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலைய உதவி ஆய்வாளர் .எஸ்.பழனிச்சாமி, உதவி ஆய்வாளர் ஆர்.கிருஷ்ண மூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு .எ.எபினேசர் குற்றப் புலனாய்வுத் துறை கேசதாம் போக்குவரத்து காவல் . எ.வெங்கடேசன் திரு எம். சக்திவேல் மற்றும் போக்குவரத்து காவலர் பி.எ .சபாபதி ஆகியோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும் கணினி தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறைத்தலைவர்.எஸ் முருகானந்தம், துறைப் பேராசிரியர்கள் . கே தியானேஸ்வரன், . என் .ரேணுகா மற்றும் எஸ் சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேரணியில் கலந்து கொண்டனர் மாணவர்களைக் கல்லூரியின் தாளாளர் பி .டி தங்கவேல் மற்றும் முதல்வர் ஹெச்.வாசுதேவன் ஆகியோர் பாராட்டினார்கள். அத னைத் தொ டர்ந்து போதைப்பொருள் தடுப்புக் குழுவுடன் கல்லூரியின் உளவியல் துறை இணைந்து ‘போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு குறித்த உளவியல் பார்வை’ என்ற தலைப்பில் இணைய வழியில் விழிப்புணர்வு நிகழ்ச்சியைநடத்தினர்.

இதில் .வி.அஸ்வந்த் கண்ணா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு போதைப்பொருள் பயன்பாட்டால் உடலில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் உளவியல் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேசினார்.

இந்த போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி யில் உளவியல் துறை மாணவர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு போதைப் பொருள் உபயோகத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து சிறப்பு விருந்தினருடன் கலந்துரையாடினர்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை போதைப்பொருள் தடுப்புக்குழுவுடன் சமூகப்பணித்துறைத்தலைவர் மற்றும் விடுதிக்காப்பாளர் ஆகியோர் இணைந்து செய்திருந்தனர். போதைப்பொருள் தடுப்புக் குழுவுடன், ஆடை வடிவமைப்பு மற்றும் கவின்புனையியல் துறை இணைந்து, “வாழ்க்கையைத் தேர்ந்தெடுங்கள், போதைப்பொருள் வேண்டாம் என்று சொல்லுங்கள்” என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை வெள்ளி விழா அரங்கத்தில் நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஈரோட்டைச் சேர்ந்த கன்சர்வேடிவ் பல் மருத்துவர் எண்டோடோன்டிஸ்ட் டாக்டர் ஷோபனா கார்த்தி மற்றும் தமிழ்நாடு யங் இந்தியன்ஸ் சுகாதார அமைப்பின் தலைமைப் பொறுப்பாளர் . கோமதி ஸ்ரீகல்யாண் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த விழிப்புணர்வு மாணவர்களுக்கு உலக சுகாதாரத்தினம் மற்றும் போதைப்பொருள் தவறானப் பயன்பாடு பற்றிய பிரச்சினைகளை கண்டறிய அவர்களுக்கு உதவுகிறது. உலக சுகாதார விழிப்புணர்வை ஊக்குவிப்பதிலும், உடல் மற்றும் மன நலனை மேம்படுத்தும் ஒட்டுமொத்த நோக்கத்துடன்போதைப்பொருள் துஷ்பிரயோகம் தடுப்பு என்ற கருப்பொருளை சீரமைப்பதிலும் நாளின் பொருத்தத்தை புரவலர்கள் வலியுறுத்தினர். 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அதனைத் தொடர்ந்து போதைப்பொருள் தடுப்புக் குழு மற்றும் தமிழ்த்துறை இணைந்து போதைப்பொருள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக கல்லூரியில் வகுப்பு வாரியாகத் தமிழ்த்துறையில் பயிலும் மூன்றாமாண்டு மாணவர்கள் வெ. க. வெற்றிவேல், பி.பவித்ரா, மோ.சந்தோஷ் ஆகியோர் போதைப்பொருள் உபயோகப்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் வகுப்பறையில் பேசினர். இதனால் பல்வேறு துறையில் பயிலும் மாணவர்கள் பயனடைந்தனர்.மேலும்,போதைப்பொருள் தடுப்புக் குழு மற்றும் உடற்கல்வித் துறை இணைந்து பொதுமக்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மிதிவண்டிப் பேரணியை நடத்தினர். இந்த மிதிவண்டிப் பேரணியானது கல்லூரியிலிருந்து தொடங்கி நஞ்சனாபுரம், நசியனூர், மேட்டுக்கடை வழியாக வந்தனர். இந்த சைக்கிள் பேரணியில் 15 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். மேற்கண்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்த போதைப்பொருள் தடுப்புக் குழுவையும், பிற துறையினரையும் கல்லூரியின் தாளாளர் .பிடி.தங்கவேல் மற்றும் கல்லூரியின் முதல்வர் முனைவர்.ஹ.வாசுதேவன் ஆகியோர் பாராட்டினர்.

# ஈரோடு மாவட்டத்தை மரங்கள் நிறைந்த பசுமையான பகுதியாக மாற்றும் முயற்சி



**ஈரோடு அக் 20-**

ஈரோடு மாவட்டத்தை மரங்கள் நிறைந்த பசுமையான பகுதியாக மாற்றும் முயற்சியில் “விதை சிறிது விடை பெரிது 3.0” என்ற பசுமை திட்டத்தை ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன் மாவட்டத்தின் அனைத்து சமூக நல அறக்கட்டளைகளுடனும், சங்கங்களுடனும் இணைந்து செயல்படுத்தும். நத்தக் காடையூரில் பில்டர்ஸ் இன்ஜினியரிங் கல்லூரியில் 2500 மரக் கன்றுகளை மாணவ மாணவிகளுக்கு வழங்கி இத்திட்டத்தை தமிழக போலீஸ் துறையின் முன்னாள் தலைவர் . சைலேந்திரபாபு துவக்கி வைத்தார். ரோட்டரி கவர்னர் எஸ் சுரேஷ் பாபு, கல்லூரி தலைவர் என்.. ராமலிங்கம், பொருளாளர் சி.கே.. பாலசுப்பிரமணியம் மற்றும் ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன் தலைவர் எம். சின்னசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

இத்திட்டத்தின் படி மாவட்டத்தில் உள்ள சுமார் மூன்று லட்சம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு மரக்கன்று அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.தங்களது நிலத்தில் மரக்கன்றுகள் வளர்க்க விரும்புவோருக்கும் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படும்.

இது தவிர மாவட்டமெங்கும் கூட்டுறவு சங்கங்கள் பால் கொள்முதல் நிலையங்கள் பஞ்சாயத்து அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலமாக மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்படும். அனைவரும் தங்களது கைபேசி எண்ணை அளித்து தேவையான மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு வழங்கப்படும் மரக்கன்றுகளின் வளர்ச்சி விவரம் செயலியின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு மொபைல் எண்ணை தொடர்பு கொள்ளவும்.

இதன் நோக்கம் வடகிழக்கு பருவமழை முடிவடையும் முன்பு 10 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு வளர வேண்டும் என்பதே. இது ஒரு துவக்கம். வருடா வருடம் சில வருடங்களுக்கு இது தொடர்ந்து நடந்தால் தான் 2024 மார்ச் ஏப்ரல் மாதங்களில் நாம் அனுபவித்த கொடுமையான வெப்பம் சில ஆண்டுகளில் குறையும்.



**ஊட்டியிலுள்ள பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்று வரும் 3-வது புத்தக திருவிழாவில் நேற்று நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் தமிழ் செம்மல் போ.மணிவண்ணன் கலந்து கொண்டு வாழ்க்கைக்கு வழிகாட்டும் இலக்கியங்கள் என்ற தலைப்பில் பேசினார்.**

### பெங்களூரு முதல் டெஸ்ட் போட்டி:
# நியூசிலாந்து அணிக்கு 107 ரன்கள் இலக்காக நிர்ணயித்தது இந்தியா



**பெங்களூரு, அக். 20-**

பெங்களூரு டெஸ்ட் போட்டியில் 2வது இன்னிங்சில் இந்தியா 462 ரன்களில் ஆல் அவுட் ஆன நிலையில், 107 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி ஆடி வருகிறது. இன்று போட்டியின் கடைசி நாள் ஆகும்.

**முதல் நாள் ஆட்டம்....**

இந்தியாவுக்கு வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதன்படி இந்தியா- நியூசிலாந்து இடையிலா2ன முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் டாஸ் கூட போடப்படாமல் கைவிடப்பட்டது. நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்டம் நடைபெற்றது. அதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.

**46 ரன்களுக்கு அவுட்....**

முதலில் பேட்டிங் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்சில் 46 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து 402 ரன்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் ரச்சின் ரவீந்திரா 134 ரன், கான்வே 91 ரன், டிம் சவுதி 65 ரன் எடுத்தனர். இதையடுத்து 366 ரன்கள் பின்னிலையுடன் தனது 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 3ம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டை இழந்து 231 ரன்கள் எடுத்திருந்தது. சர்பராஸ் கான் 70 ரன்னுடன் களத்தில் இருந்தார்.

**சர்பராஸ் - ரிஷப்...**

இந்நிலையில் நேற்று 4ம் நாள் ஆட்டம் நடைபெற்று வருகிறது. இதில் சர்பராஸ் கானுடன், ரிஷப் பண்ட் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர். இதில் அபாரமாக ஆடிய சர்பராஸ் கான் 150 ரன்னிலும், ரிஷப் பண்ட் 99 ரன்னிலும் அவுட் ஆகினர். இதையடுத்து களம் இறங்கிய இந்திய வீரர்கள் சொற்ப ரன்களில் அடுத்தடுத்து அவுட் ஆகினர். இதில் கே.எல்.ராகுல் 12 ரன், ஜடேஜா 5 ரன், அஸ்வின் 15 ரன், பும்ரா மற்றும் சிராஜ் ரன் எடுக்காமலும் அவுட் ஆகினர். இதனால் இந்திய அணி தனது 2வது இன்னிங்சில் 462 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. நியூசிலாந்து தரப்பில் ஹென்றி, வில்லியம் ஓ ரூர்க் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

இதன் காரணமாக 107 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து தனது 2வது இன்னிங்சை ஆடி வருகிறது. இன்று போட்டியின் கடைசி நாளாகும்.

## மழையால் ஆட்டம் பாதிப்பு

இந்தியா- நியூசிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. மழை காரணமான முதல் நாள் ஆட்டம் டாஸ் கூட போடப்படாமல் கைவிடப்பட்ட நிலையில், நேற்று 4-வது நாளில் இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 344 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின்னர் மழை நின்ற பிறகு ஆட்டம் தொடர்ந்தது.

## சச்சின் டெண்டுல்கர் பாராட்டு

சச்சின் டெண்டுல்கர் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது, வாழ்க்கையின் வேர்களை அடைய கிரிக்கெட்டும் ஒரு வழியாகும். பெங்களூர் மண்ணிற்கும் ரச்சின் ரவீந்திராவுக்கும் ஸ்பெஷலான தொடர்பு உள்ளது. நியூசிலாந்து அணிக்காக விளையாடினாலும், அவரின் குடும்பம் பெங்களூரை சேர்ந்தது. இன்று அதே மைதானத்தில் சதம் அடித்துள்ளார். அதேபோல் சர்பராஸ் கான். இந்தியாவுக்கு மிகவும் தேவைப்படும் போது, உங்கள் முதல் டெஸ்ட் சதத்தை அடித்தது என்ன ஒரு சந்தர்ப்பம். இரு திறமையான பேட்ஸ்மேன்களுக்கும் சுவாரஸ்யமான காலம் காத்திருக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரஞ்சி டிராபி தொடர்:
# 674 ரன்கள் குவித்து தமிழகம் டிக்ளேர்

**டெல்லி, அக். 20-**

ரஞ்சி டிராபி தொடரில் 674 ரன்கள் குவித்து தமிழகம் டிக்ளேர் செய்துள்ளது. தமிழகம் அணி தரப்பில் அதிகபட்சமாக சாய் சுதர்சன் 213 ரன், வாஷிங்டன் சுந்தர் 152 ரன், பிரதோஷ் ரஞ்சன் பால் 117 ரன் எடுத்தனர்.

நடப்பு சீசனுக்கான (2024-25) ரஞ்சி டிராபி கிரிக்கெட் தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் குரூப் டி பிரிவில் டெல்லியில் நேற்று முன்தினம் தொடங்கிய லீக் ஆட்டத்தில் தமிழகம் - டெல்லி அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற டெல்லி அணி முதலில் பீல்டிங் செய்வதாக அறிவித்தது. இதையடுத்து தமிழக அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சாய் சுதர்சன் மற்றும் ஜெகதீசன் ஆகியோர் களம் இறங்கினர். இருவரும் நிதானமாக இன்னிங்சை தொடங்கினர். இதில் ஜெகதீசன் அரைசதம் அடித்த நிலையில் 65 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து வாஷிங்டன் சுந்தர் களம் இறங்கினார். சுந்தர் - சாய் சுதர்சன் இணை நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர்.

இந்த இணையை பிரிக்க முடியாமல் டெல்லி வீரர்கள் திணறினர். இறுதியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் தமிழகம் 88 ஓவர்களில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து 379 ரன்கள் எடுத்திருந்தது. தமிழகம் தரப்பில் சாய் சுதர்சன் 202 ரன்னுடனும், வாஷிங்டன் சுந்தர் 96 ரன்னுடம் களத்தில் இருந்தனர். டெல்லி தரப்பில் நவ்தீப் சைனி 1 விக்கெட் வீழ்த்தி இருந்தார். நேற்று 2ம் நாள் ஆட்டம் நடைபெற்றது.

இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த தமிழகம் தனது முதல் இன்னிங்சில் 158.2 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 674 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. தமிழகம் தரப்பில் அதிகபட்சமாக சாய் சுதர்சன் 213 ரன், வாஷிங்டன் சுந்தர் 152 ரன், பிரதோஷ் ரஞ்சன் பால் 117 ரன் எடுத்தனர். டெல்லி தரப்பில் ஹிமான்ஷு சவுகான், நவ்தீப் சைனி ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து டெல்லி அணி தனது முதல் இன்னிங்சை ஆடி வருகிறது.

### தஞ்சை பட்டமளிப்பு விழாவில் கவர்னர் முன்னிலையில்
# முழுமையாக பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து பாடல்



**தஞ்சை, அக். 20-**

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நேற்று (அக்.19) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், ஆளுநர் பங்கேற்றதால், தமிழக அமைச்சர்கள் அந்த நிகழ்வில் பங்கேற்பதை புறக்கணித்தனர். அதேசமயம், இன்றைய தமிழ்ப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தை ஆளுநர் ஆர்.என். ரவி உள்ளிட்டோர் முழுமையாகப் பாடினார். இந்நிகழ்ச்சியை தமிழக அமைச்சர்கள் புறக்கணித்தனர்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழா நேற்று (அக்.19) நடைபெற்றது. இவ்விழாவுக்கு வந்தவர்களை பல்கலைக் கழக துணை வேந்தர் வி.திருவள்ளுவன் வரவேற்றார். விழாவில், முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முதுகலை, இளங்கலை பட்டங்களைப் பெற்ற 668 மாணவர்களுக்கு தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி பட்டங்களை வழங்கினார்.

தொடர்ந்து பட்டமளிப்பு விழா பேரூரையாற்றிய காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் ந.பஞ்சநதம் பேசிதாவது: "தமிழ் மொழியை மேன்மேலும் சீர் தூக்க வேண்டும், சிறப்பிக்க வேண்டும் அதன் புகழை செழிக்கச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தமிழ் பெரியோர்களின் நல்லாசியால் தொடங்கப்பட்டது தான் தமிழ் அறிவாலயம் எனும் இந்த தமிழ் பல்கலைக்கழகம்.

இந்தியாவிலேயே ஏன், உலகிலேயே ஒரு மொழிக்கு என்று தனித்துவமாக உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் உள்ளது என்றால் அது தஞ்சை தமிழ்ப் பல்கலைககழகம் மட்டுமே. தமிழ் மொழி மட்டுமல்ல, தமிழ் இனமே பண்பாட்டின் அடையாளமாகத் தான் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. தமிழில் நமக்கு முழுமையாகக் கிடைத்த முதல் நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம் தொட்டு, இன்று வரையிலான அனைத்துப் படைப்புகளும் தமிழின் பண்பாட்டை ஏதோ ஒரு வகையில் உரமிட்டு, நீர் பாய்ச்சி, வேலியமைத்துக் காத்து வருவது நிதர்சனமான உண்மை.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழோடு வீறுநடை போட்டுப் பயணப்பட்ட தமிழ்மொழி, இன்று அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று ஐந்தமிழாக வளர்ந்து காலத்திற்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொண்டு, உலகமொழிகளுக்கு முன்னோடியாக, பன்மொழியாளர்கள் போற்றுகின்ற உயர்தனிச் செம்மொழியாக வலம் வந்து கொண்டிருக்கின்றது. நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கெல்லாம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதைத் தவறாமல் முழங்கி, தமிழ்ச் சிந்தனையை இந்தியச் சிந்தனையாக மதித்து உலக மக்களிடம் பெருமிதத்தோடு எடுத்துக்கூறி வருகின்றார்.

இதுதான் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்துக்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருமை. தமிழர்கள் உலகமெல்லாம் பரவி தங்களின் வாழ்வாதாரத்தோடு, தமிழ்ப் பண்பாட்டை தமிழை நவீனத் தொழில்நுட்பத்தோடு வளர்த்து வருகிறார்கள். மாணவர்களாகிய நீங்களும் நம் தாய்மொழியை மறந்துவிடாமல், பிற மொழிகளைக் கற்பதில் தயக்கம் காட்டக் கூடாது. இன்று பல்வேறு படிப்புகளில் பட்டங்களை பெற்ற நீங்கள், தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் வாழ்ந்து, எல்லா வளங்களையும் பெற வேண்டும்.

அதே போல் நீங்கள் ஒரு படைப்பாளராக உருவாக வயதோ, குடும்பச் சூழ்நிலைகளோ, வறுமையோ ஒருபோதும் தடையாக இருக்கப் போவதில்லை. பட்டம் பெறுவதோடு நின்று விடாமல், உலகம் போற்றும் படைப்பாளர்களாக நீங்கள் உருவாக வேண்டும்," என்று அவர் பேசினார்.

தமிழ்ப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில், தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் பங்கேற்பார்கள் என அழைப்பிதழில் அச்சிடப்பட்டிருந்தது. இந்நிலையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், கவர்னர் பங்கேற்றதால், தமிழக அமைச்சர்கள் அந்த நிகழ்வில் பங்கேற்பதை புறக்கணித்ததாக தெரிகிறது. அதேசமயம், இன்றைய தமிழ்ப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தை ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் முழுமையாகப் பாடியது குறிப்பிடத்தக்கது.

### மாணவர்கள் சித்ரவதை:
# நெல்லை நீட் பயிற்சி மையத்தில் தமிழக அரசு அதிகாரிகள் ஆய்வு

**திருநெல்வேலி, அக். 20-**

நெல்லையில் ஜால் நீட் தேர்வு பயிற்சி மையத்தில் மாணவர்களை பிரம்பால் அடித்து சித்ரவதை செய்தது தொடர்பாக அதன் உரிமையாளர் மீது போலீஸார் வழக்கு பதிந்துள்ள நிலையில், அந்த மையத்தில் சமூக நலத்துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் நேற்று (சனிக்கிழமை) ஆய்வு மேற்கொண்டனர்.

ஜால் நீட் தேர்வு பயிற்சி மையத்தில் மாணவர்களை பயிற்சி நிர்வாகி ஜலாலுதீன் பிரம்பால் தாக்கியது, அவதூறாக பேசியது, காலணியை வீசியது உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பான வீடியோ காட்சிகள் வெள்ளிக்கிழமை வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவம் பற்றி அங்கு விடுதிக் காப்பாளராக பணியாற்றி பணி நீக்கம் செய்யப்பட்ட திருநெல்வேலி தாழையுத்தைச் சேர்ந்த அமீர் உசேன் என்பவர் மாணவர்களை தாக்குவது போன்ற சிசிடிவி வீடியோ காட்சிகள் மற்றும் காலணியை மாணவி மீது வீசுவது உள்ளிட்ட சம்பவங்களை வீடியோ ஆதாரத்துடன் மேலப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதனைத் தொடர்ந்து, மேலப்பாளையம் போலீசார் இளம் சிறார் நீதி சட்டம் மற்றும் ஐபிசி 150 (II), 133 உட்பட 3 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மாநில மனித உரிமை ஆணைய உறுப்பினர் கண்ணதாசனும் பயிற்சி மையத்துக்கு வெள்ளிக்கிழமை நேரில் சென்று விசாரணை நடத்தினார். இந்நிலையில், திருநெல்வேலி மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் தன்ஷிகா பேகம் மற்றும் பாளையங்கோட்டை வட்டாட்சியர் இசைவாணி உள்ளிட்ட அலுவலர்கள் இந்தப் பயிற்சி மையத்தில் நேற்று (சனிக்கிழமை) ஆய்வு மேற்கொண்டனர். அங்கு பயின்று வரும் மாணவிகள் விடுதியையும் அவர்கள் ஆய்வு செய்தனர்.

இந்த விடுதியில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகிறார்கள். அங்கு அவர்களுக்கு போதுமான அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பது பற்றியும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, இந்தப் பயிற்சி மைய மாணவிகள் தங்கும் விடுதி அரசின் உரிய அனுமதி இல்லாமல் செயல்பட்டது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதையடுத்து விடுதி செயல்பட்டது தொடர்பாக விளக்கம் கேட்டு சமூக நலத்துறை சார்பில் பயிற்சி மையத்துக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் விடுதிகள் தொடர்பான அனுமதி பெறுவதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கியும் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். மேலும், பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பான விசாரணை தொடர்பாக குழந்தைகள் நல பாதுகாப்புத் துறை மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளது. காவல் துறையினரும் பயிற்சி மையத்தில் மாணவர்கள் தாக்கப்பட்டது குறித்தும், மாணவர்களின் பெற்றோர்களிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### பெண்கள் டி20 உலகக்கோப்பை இறுதிப்போட்டி:
# தென் ஆப்பிரிக்கா - நியூசிலாந்து அணிகள் இன்று பலப்பரீட்சை



**துபாய், அக். 20-**

பெண்கள் டி-20 உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இன்று துபாயில் நடைபெறும் இறுதிப்போட்டியில் தென் ஆப்பிரிக்கா - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

**சார்ஜாவில்....**

9-வது பெண்கள் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் சார்ஜாவில் நடந்தது. இதில் லீக் சுற்று முடிவில் வெஸ்ட் இண்டீஸ், தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, இலங்கை, வங்காளதேசம், ஸ்காட்லாந்து அணிகள் லீக் சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறின.

**இறுதிக்கு....**

இதையடுத்து கடந்த 3 தினங்களுக்கு முன் நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்த நிலையில் நேற்று நடைபெற்ற 2-வது அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின.

இதில் 8 ரன்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்த நிலையில், இன்று துபாயில் நடைபெறும் இறுதிப்போட்டியில் தென் ஆப்பிரிக்கா - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இரவு 7.30 மணிக்கு இந்த போட்டி தொடங்குகிறது.

# தீட்சிதர்கள் கடவுளுக்கு மேலானவர்கள் இல்லை
### சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கருத்து

**சென்னை, அக். 20-**

சிதம்பரம் நடராஜர் கோவில் தீட்சிதர்கள் தங்களை கடவுளுக்கு மேலானவர்கள் என்று நினைத்து கொள்கின்றனர் என்று வேதனை தெரிவித்த சென்னை ஐகோர்ட் நீதிபதி, தீட்சிதர்கள் கோவிலுக்கு வரும் பக்தர்களிடம் ஆணவத்துடன் நடந்து கொள்வது நல்லதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிதம்பரம் நடராஜர் கோவில் தீட்சிதர்கள் கோயிலில் உள்ள கனகசபையில் பொதுமக்கள் பல்லாண்டு காலமாக வழிபட்டு வந்ததைத் தடை செய்து வழிபட அனுமதி மறுத்தனர். இதனை மீறி கோவிலில் பணியாற்றும் நடராஜ தீட்சிதர் என்பவர் பட்டியல் சமூக பெண் ஒருவரை கனகசபையில் வழிபட அனுமதித்தார். இதற்கு கோயில் தீட்சிதர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து நடராஜன் தீட்சிதர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறி அவரை நடராஜர் கோவில் தீட்சிதர்கள் கோவிலில் இருந்து பணி நீக்கம் செய்தனர்.

இதனால் இவருக்கு கோவிலில் இருந்து கொடுக்க வேண்டிய எந்த பலனையும் கொடுப்பதில்லை. இதுகுறித்து அவர் கடலூர் மாவட்ட இந்து அறநிலையத்துறை இணை ஆணையருக்கு புகார் அளித்தார். இந்த புகாரின் பேரில் இந்து அறநிலையத் துறை இணை ஆணையர் அவரது பணி நீக்கத்தை நீக்கி உத்தரவிட்டார். இதனை எதிர்த்து நடராஜர் கோவில் தீட்சிதர்களின் செயலாளர் வெங்கடேசன் தீட்சிதர் கோவில் தீட்சிதரைப் பணி நீக்கம் செய்த சம்பவத்தில் இந்து அறநிலையத் துறை தலையிடத் தடைவிதிக்க வேண்டும் என வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தண்டபாணி முன் விசாரணைக்கு வந்தது. அப்போது அவர், "நடராஜர் கோவில் தீட்சிதர்கள் கோவிலுக்கு வரும் பக்தர்களை சண்டைக்கு வருவது போல் கருதுகிறார்கள். நடராஜர் கோவில் தீட்சிதர்கள் ஆணவத்துடன் நடந்து கொள்வது நல்லதல்ல. கோவிலில் உள்ள தீட்சிதர்கள் தங்களை கடவுளுக்கு மேலானவர்கள் என நினைக்கிறார்கள். இது நல்லதல்ல.

நடராஜர் கோவில் தீட்சிதர்களால் தனக்கும் பிரச்சனை ஏற்பட்டது. காசு கொடுத்தால்தான் பூ கிடைக்கும் இல்லையேல் திருநீறு கூட கிடைக்காது. மனக்கஷ்டங்களைப் போக்க வரும் மக்கள் அவமானப்படுத்தப்படுகின்றனர் "என நீதிபதி வேதனை தெரிவித்தார். மேலும் பக்தர்கள் வரும் வரை தான் கோவில்; இல்லாவிட்டால் கோவில் பாழாகி விடும். எனவே இதுகுறித்து வரும் அக்டோபர் 21-ஆம் தேதி கடலூர் மாவட்ட இந்து அறநிலை துறை இணை ஆணையர் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

கோயில் உள்ளே தீட்சிதர்கள் கிரிகெட் விளையாடியதை பக்தர் ஒருவர் வீடியோ எடுத்தபோது தீட்சிதர்கள் அவரை தாக்கி செல்பேனை பிடுங்கி கோயில் எங்களுக்கு சொந்தம் எனக்கூறியது. இதே நீதிமன்றத்தில் அறநிலையத்துறை கோயிலின் 2 ஆயிரம் ஏக்கர் நிலங்களைத் தீட்சிதர்கள் விற்றுவிட்டார்கள் இவர்கள் சரியாக நிர்வாகம் செய்யவில்லை எனக் கடந்த 20 நாட்களுக்கு முன் விசாரணையின் போது தெரிவித்தது.

### ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தல்:
# இந்தியா கூட்டணி கட்சிகள் இடையே தொகுதி பங்கீடு

**ராஞ்சி, அக். 20-**

ஜார்க்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தொகுதி பங்கீடு குறித்த அறிவிப்பை இந்தியா கூட்டணி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஜார்க்கண்ட் முதல்வரும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜேஎம்எம்) தலைவருமான ஹேமந்த் சோரன், "ஒவ்வொரு அரசியல் கட்சியும் சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றன. எந்தக் கட்சி எந்தளவு இடங்களில் போட்டியிடும் என்பதை அறிய மக்கள் ஆர்வமாக உள்ளனர். இந்த தேர்தலை இன்டியா கூட்டணி திவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அம்சமும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இந்த தேர்தலில் இடதுசாரி கட்சிகளும் எங்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. ஜார்க்கண்டில் மொத்தமுள்ள 81 சட்டமன்றத் தொகுதிகளில் 70 இடங்களில் ஜேஎம்எம் மற்றும் காங்கிரஸ் போட்டியிடுகின்றன. மீதமுள்ள 11 இடங்களில் ஆர்ஜேடி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் போட்டியிடும்" என தெரிவித்தார்.

ஒவ்வொரு கட்சியும் போட்டியிடும் சரியான எண்ணிக்கை குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த ஹேமந்த் சோரன், "தற்போது இதை மட்டுமே நாங்கள் முடிவு செய்துள்ளோம். சரியான தொகுதிகள் எண்ணிக்கை தொடர்பான பிற தகவல்கள் விரைவில் பகிரப்படும்.

எங்களின் கூட்டணி கட்சிகளின் சில தற்போது இல்லாததால், என்னால் அதிக தகவல்களை பகிர முடியாது. அவர்கள் இங்கு வந்ததும், தொகுதிகள், வேட்பாளர்கள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகள் என அனைத்து தகவல்களையும் பகிர்ந்து கொள்வோம்" என குறிப்பிட்டார்.

கடந்த 2019 சட்டமன்றத் தேர்தலின்போது ஜேஎம்எம் 43 இடங்களில் போட்டியிட்டு 30 இடங்களில் வெற்றி பெற்றது. காங்கிரஸ் 31 இடங்களில் போட்டியிட்டு 16 இடங்களிலும், ஆர்ஜேடி 7 இடங்களில் போட்டியிட்டு ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி, பீகார் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும் ஆர்ஜேடி தலைவருமான தேஜஸ்வி யாதவ் ஆகியோர் இன்று ராஞ்சியில் ஹேமந்த் சோரனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் தொகுதி பங்கீடு விவரம் நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி, பாஜக 68 இடங்களிலும், ஏஜேஎஸ்யு 10 இடங்களிலும், ஐக்கிய ஜனதா தளம் 2 இடங்களிலும், சிராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) 1 தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

### மாநில அந்தஸ்தை மீட்டெடுக்க வலியுறுத்தி
# ஜம்மு-காஷ்மீர் அமைச்சரவை தீர்மானத்துக்கு கவர்னர் ஒப்புதல்

**ஸ்ரீநகர், அக். 20-**

ஜம்மு காஷ்மீரின் மாநில அந்தஸ்தை மீட்டெடுக்க வலியுறுத்தி முதல்வர் உமர் அப்துல்லா தலைமையிலான அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானத்துக்கு துணைநிலை கவர்னர் மனோஜ் சின்ஹா ஒப்புதல் அளித்துள்ளார்.

இது குறித்து ஜம்மு காஷ்மீர் செய்தித் தொடர்பு அதிகாரி ஒருவர் கூறும்போது, "முதல்வர் உமர் அப்துல்லா தலைமையில் வியாழக்கிழமை கூடிய அமைச்சரவை, ஜம்மு காஷ்மீரின் மாநில அந்தஸ்தை அதன் அசல் தன்மையுடன் மீட்டெடுப்பதற்கான தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது. அமைச்சரவை நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்துக்கு துணைநிலை கவர்னர் ஒப்புதல் அளித்துள்ளார். மாநில அந்தஸ்தை மீட்டெடுப்பது என்பது, ஜம்மு காஷ்மீர் மக்களின் அடையாளத்தை, அதன் அரசியலமைப்பு உரிமைகளை மீட்டெடுப்பதற்கான நடைமுறையின் முதல் செயல்முறையாகும்.

மாநில அந்தஸ்தை மீட்டெடுக்கும் விவகாரத்தினை பிரதமர் மோடி மற்றும் மத்திய அரசிடம் கொண்டு செல்வதற்கான முழு உரிமையையும் அமைச்சரவை முதல்வர் உமர் அப்துல்லாவுக்கு வழங்கியுள்ளது. ஜம்மு காஷ்மீரின் தனித்துவமான அடையாளத்தையும் மக்களின் அரசியலமைப்பு உரிமையை பாதுகாப்பது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அரசின் முக்கியமான கொள்கையாகும்.

இது தொடர்பாக பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர்களை சந்திக்க வரும் நாட்களில் முதல்வர் டெல்லிக்குச் செல்ல இருக்கிறார். நவம்பர் 4-ம் தேதி ஸ்ரீநகரில் சட்டப்பேரவையைக் கூட்ட அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தில் துணைநிலை கவர்னர் ஆற்றவேண்டிய உரையின் வரைவும் அமைச்சரவை முன்பு வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து குழு மேலும் விவாதித்து பரிசீலிக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

# விரைவில் தமிழகத்திற்கு பெரிய தொழில் முதலீடுகள் வரவுள்ளன
### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்

**திருவாரூர், அக். 20-**

தமிழகத்திற்கு விரைவில் மிகப்பெரிய தொழில் முதலீடு வர இருப்பதாக அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

பொறியியல் பட்டதாரிகளுக்கு ஆண்டுக்கு 8 லட்சம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வழங்கும் வகையிலான தொழில் முதலீடு விரைவில் தமிழகத்திற்கு வர இருப்பதாக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக திருவாரூரில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது;-

"இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான பொறியியல் பட்டதாரிகளுக்கு குறைந்தபட்சமாக ஆண்டுக்கு ரூ.8 லட்சத்திற்கு மேல் சம்பளம் கொடுக்கக் கூடிய வகையிலான புதிய தொழில் முதலீடு தமிழகத்தை நோக்கி வர இருக்கிறது. அது குறித்து வெகு விரைவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.




● திருவண்ணாமலை மாவட்டத்தில் மு.கருணாநிதியின் பொன்விழாவை சிறப்பிக்கும் வகையில் நேற்று நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த 860 ஊராட்சி மன்றங்களுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த 412 ஊராட்சி மன்றங்களுக்கும், திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த 208 ஊராட்சி மன்றங்களுக்கும் 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். அருகில் அமைச்சர், மாவட்ட கலெக்டர் ஆகியோர் உடனிருந்தனர்.

# தமிழகத்தில் மீண்டும் கனமழைக்கு வாய்ப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

புதுடெல்லி,அக். 20-

தமிழகத்தில் மீண்டும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் கடந்த 14ம் தேதி உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தாழ்வு மண்டலமாக வலுவடைந்து சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடந்த 16-ம் தேதி கனமழை பெய்தது. இதனைத்தொடர்ந்து சென்னைக்கு அருகே வடக்கே எண்ணுரையொட்டி கடந்த 17-ம் தேதி கரையை கடந்தது. இந்நிலையில், அரபிக்கடலில் அடுத்த 12 மணி நேரத்திலும், வங்கக் கடலில் வரும் 22-ம் தேதியும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், "மத்திய கிழக்கு அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து 2 நாட்களில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடையும். வங்கக்கடலில் 22-ந்தேதி உருவாகும் காற்றழுத்த தாழ்வு பகுதி 24-ந்தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும்.

இதனால் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் 4 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இன்று, நாளை, நாளை மறுநாள் மற்றும் வரும் 24ம் தேதிகளில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. கடல் சீற்றம் காரணமாக கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் இன்றும், நாளையும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு காற்றழுத்த தாழ்வு பகுதிகளால் தமிழ்நாட்டிற்கு கனமழைக்கு வாய்ப்புள்ளது" என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வங்கக் கடலில் வரும் 22ஆம் தேதி உருவாகும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேலும் வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும். ஆனால் புயலாக வலுப்பெறுமா என்பது குறித்து தகவல் இப்போது இல்லை. ஒரு வேளை புயலாக வலுப்பெறும் பட்சத்தில் வடக்கு நோக்கி செல்லும் என்றும், காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே இருக்கும் பட்சத்தில் தமிழகத்தை நோக்கி வர வாய்ப்பு உள்ளது என்றும் தனியார் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 100 விளையாட்டு வீரர்களுக்கு விரைவில் அரசு பணிக்கான ஆணை

## துணை முதல்வர் உதயநிதி தகவல்

தி.மலை, அக். 20-

விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட உள்ளது. அதன்படி முதற்கட்டமாக 100 பேருக்கு விரைவில் அரசு பணி ஆணை வழங்கப்பட உள்ளது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

திருவண்ணாமலை மாநகராட்சி பள்ளி எதிரே அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட பந்தலில் நேற்று காலை நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மாவட்டங்களை சேர்ந்த ஊராட்சி மன்றங்களை சேர்ந்த 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், மகளிர் சுயஉதவி குழுவினருக்கு கடன் உதவி மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில் துணை முதலவர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது :

திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளனர். திருவண்ணாமலையை சேர்ந்த விளையாட்டு வீரர் யுவராஜ் தடகள போட்டியில் தங்கம், வெள்ளி பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். தொடர்ந்து சாதனை படைக்க வாழ்த்துகிறேன். முதலமைச்சரின் கோப்பை விளையாட்டு போட்டிகள் மாபெரும் இயக்கமாக மாறியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் பங்கேற்றனர். இந்தாண்டு 11லட்சம் பேர் முதலமைச்சரின் கோப்பை விளையாட்டு போட்டியில் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் வெற்றி வீரர்களுக்கு பரிசு வழங்குவதற்காக ரூ. 37 கோடியை ஒதுக்கியுள்ளார் முதல்வர். தமிழ்நாடு சாம்பியன்ஷிப் விளையாட்டு போட்டியில் 500 பேருக்கு கோப்பை மற்றும் பரிசு வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட உள்ளது.

அதன்படி முதற்கட்டமாக 100 பேருக்கு விரைவில் அரசு பணி ஆணை வழங்கப்பட உள்ளது. விளையாட்டு துறையில் சாதிக்க நினைக்கும் இளைஞர்களுக்கு திராவிட மாடல் அரசு துணை நிற்கும். இந்தியாவிலேயே 13 துறைகளில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் காலை உணவு திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்றவை மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக உள்ளது. அதிகமாக வேலைவாய்ப்பு வழங்கும் மாநிலமாகவும், பெண்கள் அதிகளவு வேலைக்கு செல்லும் மாநிலமாகவும் தமிழகம் திகழ்கிறது.

48 சதவீதம் பெண்கள் வேலைக்கு செல்வதாக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இது தமிழகத்திற்கு பெருமை. மேலும் இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலை கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. திருவண்ணாமலையில் சர்வதேச ஹாக்கி ஸ்டேடியம் அமைக்கப்படும். யாரும் வீழ்த்த முடியாத தலைவராக விளங்கியவர் கலைஞர். அவரது பெயரில் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழக மீனவர்கள் கைதை தடுக்கக்கோரி வழக்கு: மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, அக். 20-

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரிய வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த கே.கே.ரமேஷ், மதுரை ஐகோர்ட் கிளையில் தாக்கல் செய்த மனுவில், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் நிகழ்வுகள் தினமும் நடைபெறும் ஒன்றாகி விட்டது. தமிழக மீனவர்களின் பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் உறுதிப்படுத்த, இந்திய கடற்படை கப்பல், இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான சர்வதேச எல்லைக் கோட்டில் இருந்து, இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க இடைக்கால உத்தரவிட வேண்டும்.

மேலும், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதையும், வலைகளைப் பறித்து, படகுகளை பறிமுதல் செய்து, கைது செய்வதை தடுக்கும் வகையில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசுக்கு அறிவுறுத்த வேண்டும் எனக் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுவை நேற்று விசாரித்த நீதிபதிகள் சுப்ரமணியன், விக்டோரியாக கவுரி அமர்வு, வழக்கு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தது.

முன்னதாக விசாரணையின் போது, மனுவில், பிரதமரின் முதன்மை செயலரை வழக்கில் தேவையின்றி சேர்த்துள்ளதாகவும், அவரை வழக்கிலிருந்து நீக்குமாறும் மத்திய அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். அதற்கு நீதிபதிகள்,

பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தினால் மீனவர் பிரச்சினை சரியாகும் என மனுதாரர் நினைக்கிறார். அதில் தவறு ஒன்றும் இல்லை. பிரதமரின் முதன்மைச் செயலர் வழக்கில் சேர்க்கப்பட்டதில் என்ன தவறு? வேண்டுமானால் ஏன் பிரதமரின் முதன்மை செயலரை இந்த வழக்கிலிருந்து நீக்க வேண்டும் என்பது தொடர்பான காரணத்துடன் மனுத்தாக்கல் செய்யுங்கள் என மத்திய அரசு வழக்கறிஞருக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

# அண்டை மாநிலங்களின்...(1-ம் பக்க தொடர்ச்சி)

ஆகவே, சமூக வலைதளங்களில் வரக் கூடிய வதந்திகளைப் பற்றியும், நாம் மிகுந்த கண்காணிப்புடன் இருந்து ஒருங்கிணைந்து செயல்பட்டு, நம் மாநில மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அதற்கான ஆலோசனைகளை இந்த கூட்டத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

**சட்ட நடவடிக்கை...**

தமிழ்நாடு காவல்துறையானது, அனைத்து தளங்களிலும் சட்ட அமலாக்கத்துக்கு, குறிப்பாக போதைப் பொருள்கள், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், மாநிலங்களுக்கு இடையே செயல்படக்கூடிய குற்றவாளிக் கும்பல்கள், மற்றும் கணினிசார் குற்றங்கள், சமூக வலைதள வதந்திகள் ஆகியவற்றின் மீதான தீவிர சட்ட நடவடிக்கைகளில், மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை உறுதிப்படுத்துகிற வகையில், மற்ற மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படக் கூடிய பொறுப்பை ஏற்றுள்ளது.

**உறுதி செய்யலாம்...**

அத்தகைய பலமான ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் மூலம் சட்டம் ஒழுங்கு, பொது அமைதி, உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் சமாளித்து நம் குடிமக்கள் அனைவரது பாதுகாப்பையும் உறுதி செய்ய நாம் கடமையாற்றுவோம். ஒருங்கிணைந்து செயலாற்றுவோம்.

போதைப் பொருட்களாக இருந்தாலும், குற்றங்களாக இருந்தாலும், இணையவழி குற்றங்களாக இருந்தாலும், அதை தடுக்க நமக்கு ஒருங்கிணைந்த முயற்சிதான் தேவைப்படுகிறது. இவ்வாறு நாம் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம், குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களையும் காப்பதோடு அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான ஒரு எதிர்காலத்தையும், நம் மாநிலங்களின் முன்னேற்றத்தையும் உறுதி செய்யலாம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

# வரும் 25-ம் தேதி முதல் நவ. 5-ம் தேதி வரை தீபாவளி பண்டிகைக்காக 40 சிறப்பு ரயில்களை இயக்க ரயில்வே திட்டம்

சென்னை,அக். 20-

வரும் தீபாவளி பண்டிகையையொட்டி பயணிகள் வசதிக்காக வருகிற 25-ம் தேதி முதல் நவம்பர் 5-ம் தேதி வரையிலான காலகட்டத்தில் 40-க்கும் மேற்பட்ட சிறப்பு ரெயில்களை இயக்க தெற்கு ரெயில்வே திட்டமிட்டுள்ளது.

தீபாவளி பண்டிகை வருகிற 31-ம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில், தென் மாவட்டங்கள், கேரளா, வெளிமாநிலங்களுக்குச் செல்லும் அனைத்து விரைவு ரெயில்களிலும் முன்பதிவு நிறைவடைந்துள்ளது. குறிப்பாக முக்கிய வழித்தடத்தில் இயக்கப்படும் ரயில்களில் அதிக அளவில் காத்திருப்போர் பட்டியல் காணப்படும் நிலையில் அங்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்.

இந்நிலையில், சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூரில் இருந்து வருகிற 29, 30 ஆகிய தேதிகளில் புறப்படும் அனைத்து ரயில்களிலும் முன்பதிவு நிறைவடைந்துள்ளது. இந்த ரயில்களில் மொத்தமாக 7000 வரை காத்திருப்போர் பட்டியல் உள்ளது. பயணிகள் வசதிக்காக வருகிற 25-ம் தேதி முதல் நவம்பர் 5-ம் தேதி வரையிலான காலகட்டத்தில் 40-க்கும் மேற்பட்ட சிறப்பு ரெயில்களை இயக்க தெற்கு ரயில்வே திட்டமிட்டுள்ளது. இதற்கான பரிந்துரையும் அனுப்பப்பட்டுள்ளது.

இதே போன்று, சாத் பண்டிகையை முன்னிட்டு வருகிற 23-ம் தேதி முதல் தமிழகம் மற்றும் கேரளாவில் இருந்து புதுடெல்லி, அகமதாபாத்துக்கு வாரம் இருமுறை சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தெற்கு ரயில்வேக்கு உட்பட வழித்தடங்களில் சிறப்பு ரயில்களை இயக்க ரெயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, சென்னை சென்ட்ரல், எழும்பூரில் இருந்து திருநெல்வேலி, நாகர்கோவில், கோவை, திருவனந்தபுரம்,மங்களூர், பெங்களூரு, மைசூர்உள்ளிட்ட நகரங்களுக்கு வருகிற 25-ம் தேதி முதல் சிறப்பு ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக தீபாவளி பண்டிகைக்கு முந்தைய நாள்களில் 7 சிறப்பு ரயில்களை இயக்க தெற்கு ரெயில்வே ஒப்புதல் அளித்துள்ளது. இதில், சென்னை சென்ட்ரலில் இருந்து வருகிற 29 மற்றும் நவம்பர் 5-ம் தேதிகளில் நாகர்கோவிலுக்கும், வருகிற 29 மற்றும் நவம்பர் 2 ஆகிய தேதிகளில் கோவைக்கும், வருகிற 30 மற்றும் நவம்பர் 6 ஆகிய தேதிகளில் திருநெல்வேலிக்கும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

சென்னை எழும்பூரில் இருந்து வருகிற 30, நவம்பர் 2 ஆகிய தேதிகளில் செங்கோட்டைக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும். சென்னை சென்ட்ரலில் இருந்து மங்களூருக்கு நவம்பர் 2-ம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படும். கொச்சுவேலி- பெங்களூரு இடையே நவம்பர் 4-ம் தேதியும், நாகர்கோவில்-மைசூர்இடையே நவம்பர் 2-ம் தேதியும் சிறப்பு ரயில் இயக்கப்படும்.

இதே போன்று, சென்னை, எர்ணாகுளத்தில் இருந்து புது டெல்லி மற்றும் அகமதாபாத்துக்கு நவம்பர் 15-ம் தேதி வரை சிறப்பு ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு, பார்வையற்ற கல்லூரி மாணவர்கள், பட்டதாரிகள் சங்கம், தேசிய பார்வையற்றோர் இணையம் ஆகிய சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு சுமூக தீர்வு ஏற்பட்டது. அருகில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் சிஜிதாஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் எம்.லட்சுமி மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.



● மழை காரணமாக வேகமாக நிரம்பி வரும் காட்டுமன்னார்கோவில் வீராணம் ஏரியை நேற்று, வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் சிதம்பரம் நீர்வளத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

# கொல்கத்தாவில் நீடிக்கும் போராட்டம்: மாநில அரசுக்கு நாளை வரை ஜூனியர் மருத்துவர்கள் கெடு

கொல்கத்தா,அக்.20-

கொல்கத்தாவில் 15-வது நாளாக தொடர்ந்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜூனியர் டாக்டர்கள் நாளை 21-ம் தேதிக்குள் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று மாநில அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் ஆர்.ஜி. கார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றிய 31 வயது பயிற்சி பெண் டாக்டர் ஒருவர், கடந்த ஆகஸ்டு 9-ம் தேதி அதிகாலையில் பலாத்காரம் செய்யப்பட்டு, பின்னர் கொடூர கொலை செய்யப்பட்டது நாடு முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவத்தில் சஞ்சய் ராய் என்பவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கை போலீசார் விசாரித்த நிலையில், கொல்கத்தா ஐகோர்ட்டு உத்தரவையடுத்து, சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டு வருகிறது.



இந்த விவகாரத்தில், டாக்டர்களுக்கு பாதுகாப்பு கோரியும், பெண் டாக்டருக்கு நீதி வேண்டும் என கோரியும், கொல்கத்தாவில் பயிற்சி டாக்டர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே இந்த வழக்கில், ஆர்.ஜி. கார் மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வரான சந்தீப் கோஷ் மற்றும் தாலா காவல் நிலைய பொறுப்பு அதிகாரியான அபிஜித் மொண்டல் ஆகியோரை சி.பி.ஐ. கைது செய்தது.

இந்த சம்பவத்தைக் கண்டித்து உரிய நீதி வேண்டி டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். உயிரிழந்த டாக்டருக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், டாக்டர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து ஜூனியர் டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டாக்டர்களின் போராட்டம் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த நிலையில், செப். 16-ம் தேதி மருத்துவக் குழுவுடன் முதலவர் மம்தா பானர்ஜி பேச்சுவார்த்தை நடத்தினார். எனினும் அதில் டாக்டர்கள் கோரிக்கை முழுமையாக ஏற்கப்படவில்லை.

இதனால் டாக்டர்கள் போராட்டம், உண்ணாவிரத போராட்டமாக மாறியது. நேற்றுடன் 15-வது நாளாக ஜூனியர் டாக்டர்கள் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இதுவரை 6 டாக்டர்கள் உடல்நிலை மோசமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வரும் 21-ம் தேதிக்குள் மாநில அரசு ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு இந்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று கோரிக்கை வைத்து 8 டாக்டர்கள் தற்போது காலவரையற்ற உண்ணாவிரத்தில் ஈடுபட்டுள்ளனர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வரும் 22-ம் தேதி மாநிலம் முழுவதும் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.